REGISTERED AT THE G. P. O. AS A NEWSPAPER

# ஈழகேசரி

தேசிய வார வெளியீடு

மலர் 16 | சுன்னுகம் — விய — ஆனி கசு, 30-6-'46 — ஞாயிறு | இதழ் 47

JAFFNA COLLEGE LIBRARY
JUL 7 1946
VADDUKODDAI, CEYLON

# வாக்காளர் தொகுதிகள்

## சிறுபான்மையினரின் பீதி

[நமது அரசியல் நிருபர்]

**ஸோல்பேரித் திட்டத்தை இலங்கை ஏற்றுக்கோண்டதுமன்றி அதைச் சகல ஆடம்பரங்களுடன் அரங்கேற்றுவதற்குமான ஒழுங்குகளும் செய்யப்படுகின்றன. இலங்கையை வாக்காளர் தொகுதிகளாகப் பிரிக்கும் முக்கிய வேலை கடந்த திங்கட்கிழமை ஆரம்பமாயிற்று.**

தொகுதி நிர்ணய சபையின் தலைவர் ஸ்ரீ எல். எம். டி. டி சில்வா என்ற இராணி அப்புக்காதது. ஸ்ரீ என். நடராஜா (இராணி அப்புக்காத்து), ஸ்ரீ எச். ஈ. ஜான்ஸ் ஆகியோர் சபையின் ஏனைய இரு அங்கத்தினராவர். தொகுதி நிர்ணய சபையின் பகிரங்க விசாரணை பழைய சட்டசபைக் கட்டடத்தில் நடைபெறுகின்றது.

நாட்டின் பல அரசியற் சங்கங்களும், சமூகஸ்தாபனங்களும் பல பிரமுகர்களும் தங்கள் அபிப்பிராயங்களைத் தெரிவிக்கின்றன. முதன்முதலாக சேர் இரத்தினஜோதி சரவணமுத்து சாட்சியங் கொடுத்தார். அவர் கொழும்பு நகருக்கு ஐந்து அன்றேல் ஆறு ஸ்தானங்கள் அளிக்க வேண்டுமெனத் தெரிவித்துள்ளார். தமிழரும், இஸ்லாமியரும் தத்தம் விருப்பப்படி ஒருவரைத் தேர்ந்தெடுக்கத் தக்க முறையில் நகரத் தொகுதிகள் வகுக்கப்பட வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டிருக்கின்றார்.

இங்கிலேயில் மேல்மாகாணத்தின் ஜனத்தொகையை அறிவது நல்லது. 18,66,000 மக்களுட் சிங்களர் 15,07,000. தமிழர் 1,47,000. [இலங்கைத் தமிழர் 60,000. இந்தியத் தமிழர் 87,000.] முஸ்லிம்கள் 1,16,000.

கொழும்புப் பட்டினத்தின் ஜனத்தொகை 355,374. இதில் 34,514 இலங்கைத் தமிழர். 44,289 இந்தியத் தமிழர். மேல்மாகாணத்துக்கு ஆகக்கூடி 20 ஸ்தானங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அப்படியானுல் 93,000 பேருக்கு ஒரு ஸ்தானம் கிடைக்கின்றது.

### சிறுபான்மையினர்

சிறுபான்மையினருக்குப் போதுமான பிரதிநிதித்துவங் கிடைக்கக்கூடிய வகையில் தேர்தல் தொகுதிகள் பிரிக்கப்படுமெனத் தலைவர் ஸ்ரீ சில்வா தெரிவித்திருக்கின்றார். எங்கெல்லாம் இத்தகைய நிலை ஏற்படுமோ அவ்விடங்களிலெல்லாம் சிறுபான்மைச் சமூகத்தினர் தங்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்து அனுப்புவது சாத்தியமாகுமென்பது தலைவர் கூற்றிலிருந்து அறிந்துகொள்ள முடிகின்றது.

விசாரணையின்போது பல அபேட்சகர் தொகுதியில் (Multi-member constituency) எவ்வாறு வாக்குகளை அளிக்கலாமென்பதைத் தலைவர் விளக்கியிருக்கின்றார். அதன்படி அபேட்சகர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப ஒவ்வோர் வாக்காளரும் அதே தொகையான வாக்குகளை உதவ அனுமதிக்கப்படுவார்கள். ஒவ்வொருவரும் தனது சொந்த விருப்பத்திற்கு ஏற்பக் குறித்த வாக்குகளைப் பிரயோகிக்கலாம். அவசியமெனக் காணின் ஒரு அபேட்சகருக்கே சகல வாக்குகளையும் வழங்கலாம். இல்லாவிடின் எவருக்குமே வாக்கு அளிக்காமல் இருந்துகொள்ளலாம். இம்முறை சிறுபான்மைச் சமூகத்தினருக்கு மிகவும் ஏற்றதாக அமையுமெனச் சபையினர் கருதுகின்றனரோ, என்னவோ?

இங்கிலேயில் வீதாசாரப் பிரதிநிதித்துவம் பற்றி ஸ்ரீ எஸ். தோத்தாத்ரி ஐயங்கார் கூறும் கருத்துக்களைக் கவனிப்போம். இலங்கையிற் சிறுபான்மைச் சமூகத்தினரின் பீதியை நீக்குவதற்கு இது உகந்ததுபோலத் தோன்றுகின்றது. அவர் கூறுவதாவது: "ஆங்கிலத்தில் (Proportional Representative) என்று குறிக்கப்படும் வீதாசாரப் பிரதிநிதித்துவத்தை வெவ்வேறு வழிகளில் அமைத்துக்கொள்ளலாம். விகிதத்துக்குக் குறைவான வாக்கு — The Limited Vote — ஒருவழி; அதாவது ஒரு தொகுதியின் வாக்காளர்கள் 4 பேரைத் தேர்ந்தெடுக்க வேண்டுமானுல் இந்த ஏற்பாட்டின்படி ஒவ்வொருவருக்கும் மூன்றேவாக்கு அளிக்கப்படலாம். இதனுல், நான்கில் ஒரு ஸ்தானத்தை யாவது சிறுபான்மையோர் அடையச் சந்தர்ப்பம் கிடைக்கிறது.

### குவியல் வாக்கி

குவியல் வாக்கு என்ற The cumulative Vote மற்றொரு வழி. சாதாரணமாக ஒரு தொகுதிக்குச் சட்டசபையில் 4 ஸ்தானங்கள் என்றால் அதிலிருக்கும் வாக்காளர் ஒவ்வொருவருக்கும் 4 வாக்கு உண்டு. அவைகளை வெவ்வேறு அபேட்சகர்களுக்குத் தலைக்கு ஒன்ருக விநியோகிக்க வேண்டும். இம்முறையில் ஒரு வாக்காளர் தனது 4 வாக்கையும் ஒரே அபேட்சகருக்கு வேண்டுமானுலுங் கொடுக்கலாம். சிறுபான்மையோர் கட்டுப்பாடுடன் இந்த உரிமையை உபயோகித்தாற் சட்டசபையிற் சில ஸ்தானங்களை அவர்கள் கைப்பற்ற முடியும்.

இன்று பல நாடுகளில் அதிகமாகப் பரவியிருக்கும் முறை The single Transferable Vote என்று கூறப்படும் ஒற்றைமாற்றுவாக்கு என்பது. இன்றுள்ள சாதனங்களில் இதுவே முதலாவதாகக் கருதப்படுவதால் மேலெழுந்த வாரியாக வேனும் இதன் அம்சங்களை நாம் ஆராய்வது அவசியம்.

பிரதிநிதித்துவம் என்ற கருவியை உபயோகிப்பதில் நமது நோக்கங்கள் யாவை?

1. நாட்டிற் பெரும்பாலான மக்கள் ஒரு அபிப்பிராயம் கொண்டிருந்தால் அந்த அபிப்பிராயத்தைத் தீவிரமாக எடுத்துக்காட்டச் சட்டசபை அங்கத்தினரிலும் பெரும்பான்மையோரிருக்க வேண்டும்.

2. சிறுபான்மைக் கட்சிகள் முற்றிலும் தேர்தலில் முறியடிக்கப்படாமல் தங்கள் பிரதிநிதிகளையும் சட்டசபைக்கு அனுப்பச் சந்தர்ப்பமளிக்கப்படவேண்டும்.

3. ஒருவாக்கு ஒரு மதிப்பு— அதாவது எந்தக் கட்சிவாக்குகளானுலுஞ்சரி, சிதறி வீணுகாமற் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதிற் பயன்பட வேண்டும். அப்பொழுததான் சட்டசபை நாட்டிலுள்ள பல வேறு அபிப்பிராயங்களையும் தத்ரூபமாகப் படம் பிடித்துக் காட்டும்.

இந்நோக்கங்களெல்லாம் ஒற்றைமாற்று வாக்குமூலம் நிறைவேற இடமிருக்கிறது. இத்திட்டத்தில் ஒவ்வொரு தொகுதியும் பலரைத் தேர்ந்தெடுக்க வேண்டிய அளவு பெரிதாயிருக்கும். ஆனுல் ஒவ்வொரு வாக்காளருக்கும் ஒரே வாக்குத்தானுண்டு. இந்த வாக்கைக் கொடுப்பதுடனில்லாது வாக்காளர் அபேட்சகர் இடாப்பில் இவர் தனக்கு இரண்டாவதாகப் பிடித்திருப்பவர், மற்ருெருவர் மூன்ருவதாக என்றெல்லாம் குறிப்பிடலாம்.

### கடிவாளம் போன்றது

பலரைத் தேர்ந்தெடுக்கும் தொகுதியில் ஒரே வாக்குத்தான் ஒவ்வொருவருக்கும் உண்டென்ருல் இது பெரும்பான்மைக் கட்சியைப் பெரிதும் பாதிக்கக் கூடிய அம்சம். சிறுபான்மையோரின் உரிமைகளைப் பெரும்பான்மையோர் பறித்துவிடாமலிருக்க அதன்வாயில் இழுத்துப்

## ஒற்றைமாற்று வாக்குமுறை

போடப்பட்ட கடிவாளம் போன்றது. ஒவ்வொருவருக்கும் ஒரே வாக்கு இருப்பதால் பெரும்பான்மைக் கட்சியினர் தங்கள் பலத்தை மிகவும் அதிகமென்றெண்ணித் தங்கள் வாக்குகளைப் பல அபேட்சகர்களுக்கு விதித்துச் சிதறிவிடலாம். அல்லது, ஒன்றிரண்டு பெரும் புள்ளிகளுக்குப் பெருவாரியாக வழங்கி விடலாம். அப்படிச் செய்வதால் ஒன்றிரண்டு ஸ்தானங்களையே இவர்கள் கைப்பற்றுவார்கள் அல்லது, ஒரு ஸதானமும் கிடைக்காமலும் போகலாம்.

பெரும்பான்மையினரை இப்படித் துன்புறுத்தலாமா? அதன் உரிமைகள் என்ன ஆவது? இதற்குச் சமாதானம் மாறு வாக்குமுறை. ஒருவர் வாக்கு அவர்முதலாவதாகக்குறித்த அபேட்சகருக்குத் தேவையில்லையானுல் அந்த வாக்கு வீணுகாது. அது அவர் இரண்டாவதாகக் குறிப்பிட்ட அபேட்சகருக்குப் பயன்படும்.

எனவே, ஒற்றை வாக்கு முறை சிறுபான்மையோருக்குப் பாதுகாப்பு. மாற்று வாக்கு பெரும்பான்மையோருக்குரிய மரியாதை செய்வது.

இந்த முறையை ஸ்ரீ தோத்தாத்ரிஐயங்கார் உதாரணத்தின் மூலம் விளக்கியுங் காட்டுகின்ருர். அது இப்போது வேண்டியதில்லை. தொகுதி நிர்ணய சபை தனது வேலையைத் தொடங்கியிருக்கும் வேளையில் இவற்றையெல்லாம் இங்கு கூறுவது பொருத்தமானதாகத் தோன்றியது. இம்முறைதான் ஏற்றதென வற்புறுத்துவது எமது நோக்கமல்ல.

### வெளிப் பூச்சு

இனி, தொகுதி நிர்ணய சபைபற்றிக் கவனிப்போம். இலங்கையை வாக்காளர் தொகுதிகளாகப் பிரிக்கவேண்டுமல்லவா? இதற்காக இலங்கை அரசாங்கம் 'மும்மூர்த்தி'களைத் தெரிந்தெடுத்திருக்கின்றது. இச்சபைக்கு அநேகர் எழுத்துமூலம் தமது அபிப்பிராயங்களைத் தெரிவித்திருக்கின்றனர். எழுத்து மூலம் அனுப்பிய அபிப்பிராயங்களுக்கு, வியாக்கியானம் வாக்குமூலங் கொடுக்க விரும்புவோரை நிர்ணய சபை தனிப்பட்ட முறையில் அறிவித்திருக்கின்றது.

இவ்வளவு வேலைப்பாடுகளும் எதற்காக என்று தெரியவில்லை. ஒவ்வொரு மாகாணமும் எத்தனை பகுதிகளாகப் பிரிக்கப்படவேண்டுமென ஸோல்பேரித் திட்டம் தெரிவித்திருக்கின்றது. குடிசனமதிப்பும் சகல விபரங்களுடன் கணிக்கப்பட்டாயிற்று. எந்தெந்தப் பகுதியிற் சிறுபான்மை சமூகத்தினருக்குப் போதிய ஸ்தானங்கள் கொடுக்கவேண்டுமென்பதை ஜனத்தொகை மதிப்பின்மூலம் அறிந்து விடலாம். இதற்குப் பெரிய விசாரணைகள் செய்து இலங்கையில் பல பாகங்களுக்கும் ஆடி ஓடித்திரியவேண்டிய அவசியமில்லை

அபிப்பிராயந் தெரிவிப்பவர்களின் கருத்துக்களுக்கேற்ப விசாரணைச் சபை தனது வேலையைச் செய்து முடிக்கவியலாது; செய்து முடிக்கப் போவதுமில்லை. ஏதோ, ஜனநாயக முறையைப் பின்பற்றி நாட்டுமக்களின் கருத்துக்களையும் அறிந்துதான் தர்மமான முறையிற் காரியங்கள் நடைபெறுகின்றன வென்பதை உலகிற்கு எடுத்துக் காட்டுவதற்காகவே அரசாங்கம் விசாரணைச் சபைகளை ஏற்படுத்திவிட்டுத் தப்பிக்கொள்ளுகின்றது. தூதுக் கோஷ்டிகளும் விசாரணைச் சபைகளும் செய்துமுடிக்கின்ற வேலைகளை மக்கள் நன்கு உணர்ந்திருக்கின்றனர்.

ஆகவே, தொகுதி நிர்ணய சபையால் வீண் காசுச் செலவன்றி, அதனுல் அதிக நன்மை வரப்போவதில்லை. இதுவரை அவர்கள் ஒருபடம் போட்டிருப்பார்கள். அதை உள்ளத்திற் பதித்துக்கொண்டுதான் அபிப்பிராயங்களைக் கேட்பார்கள்?

## நேதாஜி



நேதாஜி [illegible] பற்றி [illegible] கூறுவதை 4-ம் பக்கத்திற் காண்க.

# இலவசக் கல்வி வரப்பிரசாதம்

## அரசியல்வாதிகளின் சூழ்ச்சி

## மகாஜனக் கல்லூரி ஸ்தாபகர் தினம்

**"ஜலப்பிரளய காலத்திற் சகலவிதமான ஜெந்துக்களையும் பேழை ஒன்றில் நோவா ஏற்றியதாக விவிலிய வேதம் கூறுகின்றது. அதே போல, ஐக்கிய தேசீயக்கட்சியின் தலைவரும் தமது கட்சிக்குப் பல்வேறு விதமான அரசியல் மிருகங்களையும் சேர்க்க முயலுகிருர். ............**

"இந்த ஆவல் காரணமாக அவர் இலவசக் கல்வியையும் பலி செய்யத் தயார். தமது ஐக்கிய தேசியக் கட்சியென்ற பேழைக்குப் பலந் தேடுவதற்காகத்தான் இம் முயற்சி" என்று நியாயவாதி ஸ்ரீ M. பாலசுந்தரம் B. A. B. Sc., தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் ஸ்தாபகர் தினத்தன்று கூறினுர். இவ்விழாவுடன் இணைந்து வருடாந்தப் பரிசளிப்பும் நிகழ்ந்தது.

வடமாகாண அதிபர் ஸ்ரீ C. குமாரசுவாமி தலைமை தாங்கினுர். ஸ்ரீமதி குமாரசாமியவர்கள் பரிசு வழங்கினுர். ஸ்ரீ M. பாலசுந்தரம் அவர்களும், ஈழகேசரிப் பிரதம ஆசிரியர் ஸ்ரீ நா. பொன்னையா அவர்களும் முக்கிய பேச்சாளராக இருந்தனர். கல்லூரி அதிபர் ஸ்ரீ T. T. ஜயரத்தினம் B.A. தமது அறிக்கையிற் குறிப்பிட்டதாவது: "இன்று பள்ளிக் கூடங்களுக்கு 'ஆசிரியர் பஞ்சம்' ஏற்பட்டிருக்கின்றது. அத்துடன் அரசாங்கம் உபகரணங்களுக்கென உதவும் நன்கொடைப் பணம் மிகச் சொற்பமானது. இங்கிலேயிற் பள்ளிக்கூடங்கள் படுங் கஷ்டங்களோ அளவில. தேவையான ஆசிரியர்களும் போதிய பணமும் எங்களுக்குக் கிடைக்குமானுல் நாங்கள் எமது பணியைக் குறைவறச்செய்து முடிப்போம்."

மகாஜனக் கல்லூரியின் சமயபோதனை முக்கிய இடம் பெறுவது தமக்குப் பெருமகிழ்ச்சியூட்டுவதாக மாகாண அதிபர் தெரிவித்தார்.

ஸ்ரீ பாலசுந்தரம் தொடர்ந்து பேசியதாவது: "இலங்கைக்கு இலவசக் கல்வி புதியது. இது இப்போது ஆரம்ப நிலையில் இருப்பதால் இன்னும் உரம் பெறவில்லை. இம் முயற்சியை அரசியல் வாதிகள் நசுக்கிவிடப் பார்க்கின்றனர். அவர்களை இத்துறையிலே தோல்வியுறச் செய்வது இலங்கை மக்களின் கடமையாகும். நாட்டில் இப்போது நிகழ்பனவற்றைக் கவனிக்கும்போது ஈழத்தின் எதிர்காலக் கல்வி கவலைக்கிடமாகவிருக்கின்றது. பிள்ளையின் மூளைப்பலம் பெற்ருேருடைய பணப்பையின் அகல நீளத்தாலே தங்கியிருக்கவில்லை யென்பதை நாங்கள் ஒருபோதும்மறந்துவிடக்கூடாது. புகழையும் பணத்தையும் பெரிதெனக்கருதி அவற்றின் பின்னுற் குடல்தெறிக்க ஓடுகின்றனர், இந்நாட்டு மக்கள். திறமையைப்பற்றி அவர்களுக்கு எவ்வித அக்கறையுமில்லை. எனவே, எவ்வளவு அறிவு இருந்தபோதிலும் அதை மூலைக்குள் ஒதுக்கிவிட்டு சுத்த அசடு போலத் திரியுங்கள். இங்குள்ள பணக்காரர் கல்வி விஷயத்திற் கவனம் காட்டுவதில்லை. கல்வி மந்திரி இலவசக்கல்வியை இந்நாட்டு மக்களுக்கு உதவப் பகீரதப் பிரயத்தனங்கள் செய்து வருகின்ருர். இதைக்கண்டு பண

(தொடர்ச்சி 5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 252-ம் இலக்கப் புடவைக் கட்டுப்பாட்டு அறிவித்தல்

### இரத்தினபுரி டிஸ்திரிக்கில் மொத்த வியாபாரப் பங்கீடுகாரர்

அடுத்த பங்கீட்டுவாரந் துவக்கம் பின் சொல்லப்பட்ட, திருத்தி அமைக்கப்பட்ட மொத்த வியாபாரத் திட்டம் இரத்தினபுரி டிஸ்திரிக்கில் நடைமுறைக்கு வரும். பங்கீடுசெய்பவரின் இடப்பரப்பிலுள்ள வியாபாரிகட்கு மாத்திரம் மொத்த வியாபாரிகள் புடவை விநியோகிக்கலாம் என்பதை அவதானிக்கவேண்டும்.

| இடப்பரப்பு | பங்கீடுசெய்பவர் பெயர் | வியாபாரத் திகதி |
|---|---|---|
| பலாங்கொடை கடவத்தையும் மேடக் கோறளையும் | சிறீ கிறிஷ்ணஸ்டோர்ஸ் | செவ்வாய் மாலை 2 |
| பெல்மதுவை அதகலன்கோறளையும் நவாடுன் கோறளையில் ஒருபகுதியும் | சின்னப்பாபிள்ளை அன்ட் ஸன்ஸ் | வியாழன் காலை 10 |
| இரத்தினபுரி நவாடுன் கோறளையில் எஞ்சிய பகுதி. குக்குல் கோறளை குருவித்தைக்கோறளை | எல். அப்துல்காதர் அன்ட்கோ | புதன் காலை 9 |
| இரத்தினபுரிப்பட்டணமும் நவாடுன் கோறளையில் எஞ்சிய பகுதி, குக்குல் கோறளை, குருவித்தைக் கோறளையின் பொட்டணி வியாரிகளும் | மன்சூர் அன்ட் கோ | புதன் காலை 9 |

ஈ. ரூெட்றிக்கோ
புடவைக்கட்டுப்பாட்டதிகாரி

கொழும்பு, 19-6-1946 [2810]

## 253-ம் இலக்கப் புடவைக் கட்டுப்பாட்டு அறிவித்தல்

### வியாபாரிகளுக்கு அறிவித்தல்

வியாபாரிகள் பின்வருவனவற்றை அவதானிக்கும்படி கேட்கப்படுகிறார்கள்.

(1) லைசன்ஸ் உடைய கடைக்குள் சிறிது காலத்துக்குமுன் 107½ யார் உபயோகிக்கப்படாத கட்டுப்படுத்தப்பட்ட புடவைகள் இரண்டு தோற்பெட்டிகளுள் காணப்பட்டன. அவை வேலைக்காரருக்குரியதெனச் சொல்லப்பட்டது. கடையின் எப்பகுதியிலாயினும் வியாபாரத்தொகைக்கு உரியதாக விற்பதற்கு வெளியே வைக்கப்பட்டன அல்லாத கட்டுப்படுத்தப்பட்ட புடவைகள் எவ்வளவு தொகையென்றாலும் மேலதிகமாக வைத்திருக்கக் காணப்பட்டால் அப்படிப்பட்ட வியாபாரி தகுதிப்பத்திரம் (லைசன்ஸ்) உடையவனாயிருக்கத் தகுதியற்றவனாக எண்ணப்படும் என இத்தால் எல்லா வியாபாரிகளும் அறிந்துகொள்வார்களாக. லைசன்சில் குறிக்கப்பட்ட கடைப்பரப்பில் ஏதாவது பாகம் குடியிருப்பதற்கு பயன்படுத்தப் படுவதாகச் சொல்லுஞ் சாட்டு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(2) மேற் சொல்லப்பட்ட நிகழ்வில் வியாபாரியும் அவரது வேலைகாரரும் நிலைபரத்தை விளக்கி எழுத்துமூலம் கொடுக்க மறுத்துவிட்டனர். சட்டத்தை மீறியதாகச் சந்தேகிக்கப்படும் ஒரு வியாபாரி பிழையைக் கண்டுபிடித்த உத்தியோகஸ்தரின் கைக்குறிப்புப் புத்தகத்தில் தனது சொந்தக் கையெழுத்தில் பூரண எழுத்துமூலம் கொடுக்கத் தவறுதல் அவ்வியாபாரி லைசன்ஸ் வைத்திருக்கத் தகுதியற்றவர் என எண்ணப்படக் கூடியது. எல்லா வியாபாரிகளும் உண்ணேக்காளரின் குறிப்புப் புத்தகத்தைப்பெற்று முறைப்பாடுகளையோ தங்களது விளக்க உரையையோ எழுத உரிமையுடையவர். இவ்வேண்டுதல் வியாபாரிகட்கு மாத்திரமல்ல கடையில் வேலை பார்க்கும் விற்பனையாளருக்கும் உரியது.

(3) ஒரு சில்லறை வியாபாரியின் புடவைகள் 30 யார் கொண்ட 5 பீசுகளாக இன்னொருவர் வசம் இருக்கக் காணப்பட்டது. ஓர் விற்பனவில் சிறு தொகையாகப் பலவில் எழுதியதாக நியாயம் சொல்லப்பட்டது. ஒரு விற்பனவில் ஒரு ஆளுக்கு விற்ற முழுத்தொகைக்கும் ஒரு வில் எழுதாத வியாபாரிகள் புடவை வியாபாரியின் லைசன்ஸ் வைத்திருக்கத் தகுதியற்றவர்கள் என எண்ணப்படும்.

(4) ஒரு வியாபாரி வியாபாரத்துக்கென வாங்கிய புடவைகளோடு வேறு 3 பீசுகளும் இருந்தன. தனது குடும்பத் தேவைக்கு அங்கீகாரத்துடன் தான் அவற்றைப் பெற்றுக்கொண்டதாகச் சொல்லப்பட்டது. கடைச்சரக்குடன் கடையிலாவது கொண்டு செல்கையிலாவது வியாபாரத் தொகைக்குரிய அல்லது மொத்த வியாபார வில்லின்படி வாங்கிய புடவைகள் அல்லாத புடவைகளைக் கலக்கிறவர்கள் புடவை லைசன்ஸ் வைத்திருக்கத் தகுதியற்றவர்களாகக் கொள்ளப்படுவர்.

(5) மேலே 4ஆவதிற் கூறப்பட்டதன் தொடர்பாகச் சட்டப் பிரமாணங்களின்படி வில் மூலம் விற்றதல்லாத எச்சரக்கையும் வெளியே அனுப்பச் சட்டம் வியாபாரிக்கு இடங்கொடாது. சாதாரணமாகச் சரக்கு வியாபாரத்துக்கு வெளியே வைக்கப்படாமல் வேறு விதமாகக் காணப்பட்டால் எவ்வகையான சாக்குப் போக்கும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

ஈ. ரூெட்றிக்கோ
புடவைக்கட்டுப்பாட்டதிகாரி

கொழும்பு
18-6-1946. [2809]

### திருமணம்

உடுவில் திரு. நமசிவாயம் சபாபதி அவர்களின் புதல்வன் திரு. துரைராசா அவர்களுக்கும், தெல்லிப்பழை பொன்னம்பலம் சுப்பிரமணியம் அவர்களின் புதல்வி திருமகள் பாக்கியரத்தினம் அவர்களுக்கும் தெல்லிப்பழையில் 1946ம் ஆண்டு ஜூலை மாதம் 1ந் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்குத் திருமணம் நிறைவேறும்.


"MEDIUM"
[Estd. 1929]
261, KANKESANTURAI ROAD
VANNARPONNAI :: JAFFNA
Please correspond with the Manager for the Sale of Properties and anything commercial in North Ceylon.

புகையிலைப்பயிர் செய்வோர்க்கு — ஓர் விசேஷ அறிவித்தல்

# புகையிலை

கொழும்பு
கொம்மேர்ஷல் கம்பெனியார்

அநேக வருஷங்களாக எல்லாப் பயிர்களுக்கும் வேண்டிய பசளைவகைகளை விநியோகஞ் செய்பவர்களாக இருந்துவருகிறார்கள்.

புகையிலைப் பயிர்ச் செய்கைக்கு அவசியமான பசளைகளைப்பற்றி விசேஷமாக அறிந்தவர்கள்

C. C. C.

பிரத்தியேக புகையிலைப் பசளைக் கலப்புகளை உபயோகிப்பதாலேயே சிறந்த செழிப்பையும் மிக உயர்ந்த லாபத்தையும் பெறமுடியும்

விசேஷ ஆலோசனை இலவசமாகக் கூறப்படும். எங்கள் விசேஷ விற்பனை ஒழுங்குகளைப்பற்றிய விபரங்களுக்கு உடனே எழுதவும்.

கொழும்பு
கொம்மேர்ஷல் கம்பெனி லிமிற்றெட்
(பெரிய பிரித்தானியாவில் சமுதாயமாக்கப்பட்டது)
(அங்கத்தவர்களின் உத்தரவாதம் மட்டுப்படுத்தப்பட்டது)

COLOMBO
COMMERCIAL CO., LTD.
Incorporated in Great Britain
Liability of Members Ltd.
[2777]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் வென்ற 'சுதந்திரம்'

[சென்றவாரத் தொடர்ச்சி]

இங்ஙனம் அடிமையும் உரிமையும் தமிழ் வாழ்வில் வழங்கியுள்ளன. அப்படியானல், உரிமைபற்றி எங்கே அறிவது? அரசனைப் பற்றியும் அரசினைப்பற்றியும் கூறுவனவெல்லாம் 'உரிமை' பற்றியதே யெனலாம். ஏன்?

இன்றைய உரிமை பற்றிய இலக்கண மெல்லாம் அங்கு காணப்படுகின்றன. உரிமை, அடிமை என்பதற்கு வேருக செங்கோன்மை, கொடுங்கோன்மை யென்ற குறள் தலைப்புக்களை எடுத்துக் கொள்ளலாம். அங்கு ஒரு பெருமையுண்டு. நாம், பிறநாட்டிற்கடிமையாதலையே 'அடிமை நிலை' யென்போம். ஆனல வள்ளுவர் தம் மன்னனும் செய்யும் அடிமைத் துன்பத்தை (இன்றைய கருத்தில்) கொடுங்கோன்மை யென்பர். ஆதலின் உரிமையை அன்று "நீதி"யைப்பற்றிப் பேசிய இடங்களில் எங்கும் காணலாம். ஆதலால் தம் அரசர் பிறவரசர் என்பதின்றி 'நீதி' யுடைய இடமெல்லாம் உரிமைநாடெனக் கருதிய உண்மை நிலை அங்கு வெளிப்படுதலைக் காண்கிறோம். அது, தமிழர் கொண்ட ஓர் அருமையான பண்பிலிருந்து இணைத்த எண்ணமாகும்.

நன்று. திருக்குறள் அரசியலில், உரிமைக்குரிய கொள்கைகளைப்பற்றி என்ன உரைக்கப் படுகின்றது? அதனை எப்படிப் பெறுவது என்பதனைச் சிறிது ஆராய்ந்தாலே போதுமே!

உரிமையரசாங்கத்திலேயே ஓர் நாடு உண்மையான முன்னேற்றத்தினை யடைய முடியும். வள்ளுவர்,

'உறுபசியும் ஓவாப்பிணியும் செறுபகையும்; சேரா தியல்வது நாடு'

எனக்கூறுகின்றார்.

நோயொடு பசியிகந் தொரீஇப் பூத்தன்று பெரும நீ காத்த நாடே என்றுதான் 'பதிற்றுப்பத்து' என்ற அரசியல் இலக்கியமும் பேசுகின்றது. 150 ஆண்டுகளாக ஆண்ட ஆங்கிலேயரின் கீழ் ஒருவேளைச் சோறும், சராசரி 40 வயதும் (மனித வாழ்வில் $\frac{1}{3}$ பங்கு) நம்மைக் காத்துக் கொள்ளும் படையுங் கூட இல்லையெனில் அதில் வியப்பேன்? இதைப் பொறுத்துக் கொண்டு வீரத் தமிழருந்தான் இவ்வளவு காலம் பழம் பெருமையைப் பாடுகின்றனர்? தன்னைச் சேர்ந்தவனும் உட்பகை யுடையவன் என எண்ணினாலும் வெறுத்த தமிழன், வேறு நாட்டான் வெளிப்படையாக நம் அறிவு, பண்பு, செல்வம் யாவற்றிற்கும் இத்தனைகாலம் பகைவனுகக் கண்டும் பொறுத்தானா? அஞ்சிக்கொண் டிருந்தானா?

நாட்டின் பொருளாதாரம் உயரும்போதே அதன் அறிவு, ஆற்றல் பெருமை யெல்லாம் செழிக்கின்றது. அதற்கு நாட்டினர் யாவரும் வேலையில்லாத் திண்டாட்டத்தால் தூங்காமற் பொருளை வளர்த்து எல்லோரையும் அறிவுடையராக்கும்போதே பகைவனுக கஞ்சாது எதிர்த்து நிற்கும் துணிவுடைமை பிறக்கும். இன்றைய போரில் ருஷியாவின் வெற்றி எப்படி வந்தது? நமக்கு எத்தனை பேருக்குக் கல்வியுண்டு? நூற்றுக்கு வேலையில்லாதோர், அதனல் பைத்தியம் பிடித்து நஞ்சுண்போர் எவ்வளவு? இந்நிலையில் துணிவு வருமா?

வள்ளுவர் சொல்வதைப் பாருங்கள்.

'தூங்காமை, கல்வி, துணிவுடைமை இம்மூன்றும்; நீங்கா நிலனாள் பவற்கு'

என்ற நிலை நமக்கு வரவேண்டுமானல் உண்மையான உரிமையரசல்லவோ வேண்டுமென்கிறார். 'இறைமாட்சி' என்ற தலைப்பைப்படியுங்கள். ஆனல் அதிற் காணும் அரசன் இன்றைய 'அரசன்' என்ற பேருடையவன் அல்லன். அவனே குடிகள். குடிகளே அவன்.

கோவலனுக்கு அநீதி செய்ததை உணர்ந்ததும் உயிரை விட்டவனையா இன்றைய, மக்களுள்ளத்துடன் சிறிதும் ஒன்றுபடாத மன்னருடன் சேர்ப்பது? ஆதலின், மன்னனைப் பற்றிச் சொல்வன மனிதனைப் பற்றி, உரிமையைப்

மு. கோவிந்தசாமி

பற்றிக் கூறுவனவெனக் கொண்டால் 'உரிமை'யைப் பற்றி மிகுதியும் அறிய முடியும், அத்தகைய அரசன் நாட்டில் அன்றைய மக்கள் வாழ்வு உலக முன்னணியில் நிற்பதற்கு என்னென்ன கடமைகள் உண்டோ அவற்றைப் பிறர்க்கு எவ்வித இடையூறுமின்றி வளர்தற்காம் வழிகளையெல்லாம் செய்வான். அந்நெறியில் இடையூறுகளைத் தன் உயிரையும் விட்டு நீக்க முயற்சிப்பான்.

'அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா; மான முடைய தரசு'

என்ற குறளும் அதனையே;—மக்களின் அற (நற்கடமை) வாழ்வின் வளர்ச்சியையே குறிப்பிடுகின்றது.

'தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்; என்குற்றம் ஆகு மிறைக்கு' என்பதை ஆழ்ந்து அறிந்து தன்னிடமும், தன்னாட்டிடமும் என்ன குறைகள் உண்டோ அவற்றைப் பிறரிடமும் காணும் போது தன்னைப்போல, தன்னாட்டைப் போலவே கருதி அவற்றைத் திருத்தி விளங்கச் செய்யும் ஊக்கமும் உள்ளமும் அதனையே நாடும் அரசற்கல்லவா கூறப்படுகின்றன? இன்றைய நம்மை ஆளும் ஆங்கிலேயருக்கல்ல! அது அவர்கட்குப் பொருந்துமா? என்பதும் வெளிப்படைதானே!

அப்படி உணர்ந்தால், தம் நாட்டிற்போல, பொருளாதாரம் கொடுக்கும் வழிகளையெல்லாம் செய்வர். உழவு, தொழில், வாணிபம் இவற்றைப் பெருக்குவர். அவற்றைக் கருத்துடன் (உடந்தவரை வாங்கிக்கொண்டு ஜமீந்தார், சுதேச மன்னர் இவர்களை வைத்திருக்காமல்) சேர்ப்பர். 100 ரூபாய் கொடுத்து வேலை வாங்கவேண்டியவர்க்கெல்லாம் ஆயிரக்கணக்கில் கொடுத்துத் தூங்கச் செய்யார். ருஷியாவைப் போல் ஐந்து வருடத் திட்டங்கள் போட்டு நாட்டின் நலனை நாள்தோறும் நாடிப் பெருக்குவர். இவற்றில் எது இன்று நம் நாட்டில் உருவாக, முழுமையாக, உண்மையாக நடத்தப்படுகிறது.

'இயற்றலும், ஈட்டலும், காத்தலும், காத்த வகுத்தலும் வல்ல தரசு' என வற்புறுத்தும் ஆசிரியர் அவை நடந்தாற்றானே அது உரிமை யரசுடைய நாடு என்கிறார்! தனக்குத்தான் தெரியவில்லை. அல்லது மனமில்லை, நாட்டில் அறிஞர் சொன்னல் கேட்க வேண்டும். அதுதான் பேச்சுரிமை, எழுத்துரிமை யென்பது.

தான் அறியாமலும், தவறியும் பிழை செய்தால் அதனையெடுத்துக் காட்ட உரிமையளிப்பான் நாட்டின் நன்மையைக் கருதுபவன். ஆனல் சுரண்டிச் சுரண்டித் தன்னாட்டிற்குக் கப்பலேற்றுபவனிடம் பேச்சுரிமை கிடைக்குமா? அது இல்லாத போது நாட்டில் விளையும் குற்றநீங்கி நன்மை தான் விளங்குமா? தமிழ் அரசில் உண்டா என்பீர்கள். இதோ! வாய்மொழி.

'செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்; கவிகைக் கீழ்த்தங்கும் உலகு'

நாம் தான் இந்த அரசு[illegible]யோடு வெளியேற்[illegible]றோமே! என்கிறீர்களா? அன்று வேண்டுமானல் எல்லா உரிமையும் ரூஸ்வெல்ட் சொன்னதெல்லாம் நிலைக்கும்.

இங்ஙனம் அறம் வளர்ந்து மக்கள் முயற்சியிற் பெருகி பொருள் வரும் வழிகள் மலியும் அரசியல் உரிமையுண்டு. நீதியுண்டு. தான் செய்யும் குற்றத்தை யெல்லாம், மறைத்து மக்கள் செய்யும் உரிமைக் கிளர்ச்சிகளுக் கெல்லாம் சிறைச்சாலை தள்ளா ஜனநாயகம் உண்டு.

அந்நிலை யில்லை யென்றுல் அதனை வென்று நிலை நாட்டினர் தமிழர். அதனல் தான் வென்ற சுதந்திரம் என்ற தலைப்பிட்டேன். சுதந்திரம் அவர்கட்குப் பரம்பரை யாகவோ, வானத்திலிருந்து முன்னர் ஆங்கிலேயரும், ஜப்பானியரும் ஏமாற்றியது போலக் கடவுளால் கொடுக்கப் பட்டோ கிடைத்துவிடவில்லை!

அவர் வாழ்வே உரிமைப் போர். உரிமைதானே உயிர்!

கூற்றுடன்று மேல் வரினும் கூடியெதிர் நிற்கும் ஆற்றல் அவர்களைக்காத்தது. தன்னாட்டின் அடிமைத்தளையை அறுத்தெறிய நடக்கும் உரிமைப் போரில் விழுப்புண் படாத (மார்பில், முகத்தில்) நாளை வாழாத நாளாக வைத்தெண்ணினன். ஆம், உரிமையோடு வாழும் நாள்தானே உண்மையாக வாழ்ந்த நாள். அடிமைப்பட்ட நாளிற் சாவைத் தவிர நம் வாழ்வை வாழ முடிகிறதா? இமை கொட்டும் நேரமும் தூங்காமல், தளராமல் உரிமைக்குப் போரிட்டான் தமிழன்.

'விழித்தகண் வேல்கொண் டெறிய அழித்திமைப்பின்; ஓட்டன்றோ வன்கணவர்க்கு' என்ற குறளே விளக்கும். அப் போரில் தோல்வியேது? பலமுறை தோற்கலாம். முடிந்த வெற்றி கிடைக்காவிடினும், அம்முறை செய்த போரினல் முன்னிலும் வலிமையும், முன்னேற்றமும், அறிவும் வளர்ந்து தானே செல்லும். அதனல் தான் உரிமைப் போரில் தோல்வியே இல்லையென்பது. நல்லது நாடி முன்னேறினல் தடைகளும் துணைகளாகவே முடியும். ஏன்? பின் வரும் பல தடைகளை முன்னறிந்து நீக்கப் பயன்பட வில்லையா? அதுபற்றியே,

'இழைத்த திகவாமைச் சாவாரை யாரே; பிழைத்த தொறுக்கிற் பவர்'

என்றார். நாட்டின் உரிமையைக் கொண்டு வந்தாலன்றித் தூங்க மாட்டேன் என முயன்ற வீரன் இடையில் தோற்றாலும், இறந்தாலும் இது வெற்றியே என்கிறார். பணி செய்து கிடப்பது நம் கடன். தொடர்ந்த முயற்சி வெற்றியைத் தரும். இம்முயற்சிஅன்று 'வாளின் மூலமே' சுதந்திரத்தைக் கொடுத்ததெனினும் அன்றே உயிரையழிக்கும் போரை, நாட்டின் அமைதி, இன்பம், உரிமை இவற்றைக் காப்பனவற்றுள் நீதிக்கு (செங்கோல்) இரண்டாவதாகவே வைத்தனர். செங்கோலை (உரிமை) நம்பினரன்றி வேலை நம்பவில்லை.

வேலன்று "வென்றி தருவது மன்னவன்;கோலதூஉங் கோடா தெனின்'

என்றவள்ளுவர்தான் உண்மையில் போரை வெறுத்த தமிழ் நாட்டு புத்தர், காந்திஜி எனபேன். அன்றைய நிலையினையும், வேறு வழியில்லா நிலையையும் கூறுகின்றாரன்றி அவர் ஓர் அஹிம்ஸைப் போரையே அங்கு குறிக்கிறார் எனலாம். யாரும் உரிமையுடன் வாழ விட்டு விட்டால் வேலுக்குத் (படை) தேவையேது? 'மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை' 'முறை காக்கும் முட்டாச் செயின்' என்பதெல்லாம் படைகளைக் கொண்டு பகைவரை யடக்கவோ, உரிமையைக் காக்கவோ முடியா தென்பதைத் தானே குறிக்கின்றன? ஆங்கிலேயர் (அ) இன்றைய [illegible]

(தொடர்ச்சி 6-ம் பக்கம் பார்க்க)

## மன்னரிட்ட தீ!

சாரதா

அந்த நாளும் வந்தி டாதோ?
இந்த வாழ்வ கன்றி டாதோ?
கந்தை போல நைந்து மாள
வந்த போரும் நின்ற (து); ஆனல்.......

பஞ்சம் தீரு தில்லை, இன்னும்
வஞ்சர் சோரம் மாறு தில்லை;
நெஞ்சு தேற உண்டு டுத்து
உய்ஞ்ச பாடும் இல்லை, இல்லை!

தின்னும் போது செட்டில், "அம்மா
என்ன சோறி (து?)" என்ற தட்டி,
அன்ன மெல்லாம் காக்கை நாய்கள்
உண்ண வைத்த காலம் எங்கே?

"ஊர்க் கறுப்பன் நெல்லி லாது
ஆக்க மாட்டேன் சோறெ"ன் றுணை
வேர்க்க விட்ட லைத்த மாதர்
மூர்க்க மெல்லாம் போன தெங்கே?

'ஆட்டா' மாவில் பிட்டு ரொட்டி
போட்டு நாளை ஓட்டு கின்றார்;
மூட்டை மூட்டை யாய்க் குவிந்த
வீட்டி லெல்லாம் 'கூப்ப' னாட்சி!

இன்னும் தீரு தில்லை (ப்) பஞ்சம்
என்னும் பேயோ தின்னு தெம்மை;
மன்னர் தம்முன் மாறு பட்டார்
என்னில், மாந்தர்க் கின்னல் தானே?

போட்டி போட்டி எங்கும் போட்டி;
ஆட்சி பேதத் தாலும் போட்டி;
மீட்சி வேண்டு கின்றோம்: வேந்தர்
சூழ்ச்சி தீர்ந்(து) அஹிம்சை காக்க!

# காதலும் கற்பும்

காதல், கற்பு, காமம் என்பனபற்றிப் பழைய நூல்களைத் துணைக்கொண்டு ஸ்ரீ. கா. அப்பாத்துரைப்பிள்ளை எம். ஏ., எல். டி. அவர்கள் முத்தமிழ் மலரில் ஆராய்ந்திருக்கின்றார். அவர் கூறுவதாவது:

கற்பு என்பதற்கிணையான வடநூல் வழக்கு பாதி விரத்யம் என்பது. பிற்கால வடமொழி நூல்களில், இது பெண்டிர் உடல் தாய்மையையும் முற்கால நூல்களில் உளத் தாய்மையும் தனிப்படக் குறிக்கவழங்கின. தமிழ் நூல்களிற் பெரும்பாலும் இரண்டும் ஒருங்கியைந்ததே கற்பு எனப் போற்றப்படுகிறது. ஆகவேதான் சீதை இராவணன் உள்ளத்தில், இடம்பெற்றதுபோல், ஒரு பெண் இடம் பெறுவதும் இழுக்கு எனத் தமிழ் நூல்கள் கொண்டன.

தமிழருக்கு இன்று கிடைத்துள்ள நூல்களில் மிகப் பழைமையான நூலான தொல்காப்பியமும், அதனைப் பின்பற்றி எழுதப்பட்ட மற்ற இலக்கண நூல்களிலும், கற்பு என்ற சொல் இப்பொருளில் வழங்கவில்லை என்றல் தெளிவு. திருமணம் (வரைவு) நிகழ்ந்தபின் பலர் ஒப்ப ஆடவர், பெண்டிரிடையே நிகழும் கட்பு என்ற பொருளில், வழங்கப்படுகிறது. இவ்விடத்தில் அது பெண்டிர்க்குச் சிறப்பான பண்பாகவன்றி இருபாலார்க்கும் ஒத்த பண்பாகவே வழங்கப்பெறுகிறது என்பது மிகத்தெளிவே யாகும்.

கற்பு என்பதுடன் ஒருசார் ஒத்து, இன்று வழங்கும் சொல் காதல். மணவினைக்கு முன்னே பின்னே ஆடவர், பெண்டிர் அன்பை இச்சொல் இன்று குறிக்கின்றது. ஆனல் தொல்காப்பியர் காலத்தில் மணவினைக்குப் பிற்பட்ட காதலே கற்பு என வழங்கப்பட்டது. மணவினைக்கு முற்பட்ட காதல் களவு எனப்பட்டது. இரண்டும் பொதுவாகத் தலைவன் தலைவிக்கு ஏற்பட்ட அன்பைக் குறிக்கத் தொல்காப்பியர் வழங்கும் சொல் காமம் என்பது. இன்று அது மிக இழிந்த பொருளில் தகாக் காதலை உணர்த்துகின்றது. தொல்காப்பியர் காலத்தில் காமம் என்பது காதல் என்ற பொருளினையே வழங்கிற்று என்று துணியலாம். பிற்காலத்தில் வடநாட்டுச் சமயத் தலைவர்களால் படிப்படியாகத் தமிழர் வாழ்வும் கோட்பாடும் பண்பும் மாறத் தலைப்பட்ட பின்பே 'களவு' சொல் இலக்கணத்துக்கு வெளியே ஒழிக்கப்பட்டது; காமம் என்ற நல்ல சொல் இழிந்து தகாக் காதல் அல்லது விலங்கியல் காதல் என்ற பொருள் பெற்றுக் குறைவுற்றது. கற்பு என்பது இருபாலார்க்கும் உரியதென்ற எண்ணம் போய், பெண்களுக்குரியதென்று கொள்ளப் படலாயிற்று. இடைக்காலத்தில் படிப்படியாய் அப்பொருள் இன்னும் குறுகி உளத்தாய்மை, உடல் தாய்மை என்றாய் இறுதியில் பெண்பாலர் அடிமைத்தனத்தைக் குறிக்கும் இடக்கரடக்கல் சொல்லாயிற்று. பெண்பாலர்க்குக் கல்வியுரிமை யில்லை என்று கொண்ட பரிமேலழகர் காலத்திற்குள் இப்பொருள்வலியுற்றது. ஆயினும் நாயன்மார், ஆழ்வார்கள் காலம் வரை கூடப் பெண்கள் கல்விக்கு உரிமையுடையாராகவேயிருந்தனர். கல்வியும் இசையும் பொதுமகளிர்க்கும், இழிமகளிர்க்கும் உரித்தானது என்ற எண்ணம் ஆடல்மகளிர் கோயில் பணியிலீடுபட்டுத் தேவராட்டியார் ஆனபின்தான் பிறந்து வளர்ந்தது. ஆயினும் இன்றளவும் சில உயர் வகுப்பினர் விடாது இவற்றைப் பேணியே வந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இனியேனும் தமிழர் இத்தீக் கருத்தாகிய தீகைப்பூண்டினின்று விலகி ஒழுகி உயர்வார் என்று நம்புவோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழகேசரி

சுன்னாகம்: விய, ஆனி கசு


## நிலாவரை நீர்ப்பாய்ச்சல்

நீர்வளம்நிலவளமில்லாத யாழ்ப்பாணத்திற் கமச் செய்கை விஷயமாகப் பொது மக்கள் அடையுஞ் சிரமம் எத்தன்மைத் தெனக் கூற வேண்டியதில்லை. இந்த ஏழைக் கமக்காரருக்கு எவ்வித உதவி புரியலாமென்பது நெடுங்காலமாக இருந்து வந்த பிரச்சினையாகும். நீர்ப்பாய்ச்சல் வசதிகளை யுண்டாக்கும்படி பலர் இடைவிடாது அரசினரை நெருக்கி வந்தனர். இருபது முப்பதடி ஆழமுள்ள கிணறுகளிலிருந்து கமங்களுக்கு நீர்ப்பாய்ச்சி அதிக லாபத்தைப் பெறுவதென்பது இயலாத காரியம். இவ்விஷயமாகப் புதிய உபாயங்கள் கைக்கொள்ளுங் காலம் எப்போது வருமென யாவரும் எதிர்பார்த்திருந்தனர். இத்துறையில் யாழ்ப்பாணமக்கள் ஏதாவது சலாக்கியத்தை அடையின், அதுவே அவர்கள் ஈடேற்றத்துக்கு உறுதுணையாகும்.

நீர்ப்பாய்ச்சலுக்கு நிலாவரைக் கூபம் மிகவும் நன்மை பயக்குமென்றும் உடனே அதில் வேலையாரம்பிக்கும்படியும் பன்முறை யாழ்ப்பாணமக்கள் முனைந்து நின்று வற்புறுத்தியும், அரசினர் செவி மடுத்தாரில்லை. ஒருபடியாக இப்பொழுது வேலையாரம்பித்துச் சில பரிசோதனைகள் செய்கின்றார்கள். எவ்வளவு காலத்துக்கு ஒரே முறையில் நீர்ப்பாய்ச்சலாம்? எத்தனை ஏக்கர் நிலங்கட்கு இதிலுள்ள நீர் போதியதாகும்? உப்புநீர் காலவடைவில் கலக்குமா? இப்போதுள்ள மட்டத்தினின்று நீர் குறைகின்றதா என்னும் விஷயங்கள் பெரிதும் ஆராய்ந்து நோக்கற்பாலன. சென்ற இரண்டு மாதகாலமாக இரண்டு யந்திரங்கள் இரவு பகலாக வேலை செய்தும், நீர் மட்டமானது சிறிதும் குறையவில்லையென்றும், உப்பு நீர் கலக்கவில்லையென்றும் நேரே பலரறிந்தனர். யாவர்க்கும் இச் செய்தி மிக்க திருப்தியையும் மகிழ்ச்சியையும் கொடுத்ததாகும்.

இப்போது யாரோ சிலர் உப்புநீர் கலக்கின்றதென்றும், நீர்ப்பாய்ச்சலுக்கு இக் கூபம் உதவாதென்றும், பொய் வதந்திகள் பரப்புகின்றனர். இந்தக் கூபத்தில் கடமையாற்றுஞ் சிங்களர் சிலரே இவ்விதமாகப் பிரசாரஞ் செய்கின்றனரென நாம் அறிகின்றோம். இக் கூபம் பெருநன்மையைப் பயக்கும் ஸ்தானமாக ஏற்படுவது, சில சிங்களக் கனவான்களுக்குச் சகிக்க வியலாதிருப்பது சில புதினங்களிலிருந்து அறியக் கிடக்கின்றது. கொழும்பில் வெளியாகும் ரைம்ஸ் பத்திரிகையில் திரு. சில்வா என்பவர் புத்தூர் நிலாவரை நீர்ப்பாய்ச்சலுக் குதவாதென மொட்டையாகக் கூறுவது பேராச்சரியமாகின்றது. இவர் இவ்விஷயமாகப் பல கதைகள் கூறுவதைப் பார்க்குங்கால், இவரின் நோக்கம் சந்தேகத்துக்கிடமாகின்றதே. பரிசோதனை வேலைகள் பூரணமாக முடிவடையுமுன், இந்தப் பிரசாரத்தை இவர் ஆரம்பித்தது இரங்கற்பாலது. இப்பொழுது மேற்படி கூபத்திற் கடமை பார்க்கும் என்ஜினியர் திரு. கஹவித்தாவிடம் தாம் நேரேயறிந்ததென்கின்றார். நீர்ப்பாய்ச்சற் பகுதித் தலைவராகும் மிஸ்டர் ரெயிலர் என்பவரும் முன்னே இவ்வாறு கூறினராம். பகிரங்கவேலைப் பகுதியின் தலைவராக விருந்து காலஞ்சென்ற திரு. S. மகாதேவா அவர்களும் நிலாவரை நீர்ப்பாய்ச்சலுக்கு உதவாதெனக் கூறினராம்.

இவ்வாறாக, அவர் சொன்னார் இவர் சொன்னார் என்று கூறி, இந்த அரிய முயற்சிக்குத் தடைதாமதங்கள் கொண்டுவர முயல்வது பெருந்தன்மையாகுமா? நேரே எல்லாவிஷயங்களையும் பரிசோதனை செய்தபின்னரன்றோ, எல்லாம் முடிவு செய்யப்படலாம். டெயிலி நியூஸ் பத்திரிகை இக் கூபம் நீர்ப்பாய்ச்சலுக்குப் பெரிதும் உதவியாகுமென்று எழுதுகின்றது. ஆரம்பத்தில் 600 ஏக்கர் நிலம் இக் கூபத்தால் நீர்ப்பாய்ச்சப்படலாமாம். இக் கூபமன்றி ஊரெழுவிலும், மானிப்பாயிலும், குரும்பசிட்டியிலும் உள்ள வற்றா நீருடைய கூபங்களும் பரீட்சிக்கப்படவேண்டுமெனவும் இப் பத்திரிகையில் எடுத்துக்காட்டப்படுகின்றது. விஷயமிவ்வாறாகச் சில வகுப்புத்துவேஷவாதிகள் இந்நன் முயற்சியைப் பழுதாக்க எண்ணுவது பெருந் துரோகமென்றே கூறவேண்டும். யாழ்ப்பாண மக்களுக்குக் கமச் செய்கை விஷயமாக சிங்கள மந்திரிகள் என்னதான் வெட்டி விழுத்தினர்? தென்னிலங்கையிற் கோடிக் கணக்காகப் பணத்தை இத்துறைகளல் அள்ளி வீசவில்லையா? யாழ்ப்பாணத்திலும் ஒரு சிறிய தொகையாவது செலவிடின், என்னதான் வந்துவிடும்? யாழ்ப்பாணப் பொதுமக்கள் இப்புத்தூர்க் கூப விஷயமாக விழிப்பாகவிருந்து, விரும்பிய நன்மையைப் பெறுவதில் தவறாதிருப்பாராக. பொதுக் கூட்டங்கள் கூட்டி இவ்விஷயம் நன்கு நடைபெறும்படி அரசினரைத் தூண்டுவதுடன் பொய்ப்பிரசாரங்களை ஒதுக்கி, உண்மையை நிலவச் செய்தல் வேண்டும்.

## இடைக்கால அரசாங்கம்

இந்தியாவில் இராசப் பிரதிநிதி சிருட்டிக்க முயன்ற இடைக்கால அரசாங்கம் ஏற்படாதாயிற்று. ஒவ்வாதஒழுங்குகட்குக் காங்கிரஸ் சபையினர் இணங்க மறுத்ததே இவ்வரசாங்கம் ஏற்படாமைக்குக் காரணமாயிற்று. பத்துக் கோடி சனத்தொகையுடைய முஸ்லீம்களுக்குத் தாமே பாதுகாவலரென்றும் அவர்கள் சார்பில் மந்திரிகளை மத்திய அரசாங்கத்தில் நியமிக்கும் உரிமை தமக்கேயுடையதென்றும் ஜனாப் ஜின்னா வாதாடுகின்றனர். இவர் கூற்றுக்கு ஆதாரமில்லையாயினும், இவரெண்ணப்படி செய்ய எவரும் தடை புரியவில்லை. காங்கிரஸ் சபையோ ஒரு வகுப்பினரின் ஸ்தாபனமாகாது, எல்லா வகுப்பினர்க்கும் பொதுவான தேசிய ஸ்தாபனமாகும். இச் சபையினர் தமது கட்சியின் சார்பில் மந்திரிகளை நியமிக்கும் உரிமையில் மற்றையோர் தலையிடவேண்டியதில்லையே. இதுவே நீதியாக, காங்கிரஸ் சபையினர் சார்பில் நியமிக்கப்படும் மந்திரிமார்களும் தமது அங்கீகாரத்தைப் பெறவேண்டுமென வாதிக்கின்றார் இந்த வகுப்புவாதி ஜனாப் ஜின்னா. இதை எப்படிக் காங்கிரஸ் சபையினர் ஒத்துக்கொள்வாரோ? தேசியக்கட்சியாகிய காங்கிரஸ் தமது பிரதிநிதிகளாகும் மந்திரிகளை எந்த வகுப்பிலிருந்து நியமித்தாலும் எவர்க்குங் கேட்க உரிமையின்றே. தேசிய முஸ்லீம்களைக் காங்கிரஸ் கட்சியினர் வேண்டுமாயின் நியமிக்கலாம். இவ்வகுப்புவாதியின் வாதத்துக்கு இணங்கின், இச்சணமே காங்கிரஸ் தேசியசபையென்ற பெருமையும் பேரும் போய் இந்துக்கள் சபையாய் விடுமல்லவா? சென்ற அறுபது வருடமாகக் காங்கிரஸ் சபை செய்துவந்த தொண்டும் கொள்கையும் இழக்க வேண்டியதாகுமே. இந்த வகுப்புவாதியின் கோரிக்கையை இராசப்பிரதிநிதியும் பிரிட்டிஷ் மந்திரிசபைக் குழுவினரும் ஆதரித்தாரே என்பது தான் எமக்குத் துக்கத்தை உண்டாக்குகின்றது.

# பாதை ஓரத்தில்

★

## பாட்டைசாரி

“பாரு, பாரு! வட்டவடிவம் பாரு! வாய்ப்பான லட்டுப்பாரு! வாங்கிப் புசித்துப் பாரு!” என்று பட்டண வீதிகளிலும், திருவிழாக் காலங்களிலும் மிட்டாய் விற்பவர்கள் இரைவதுண்டு. குழந்தைகளும் வளர்ந்து ஆளானவர்களும் அவர்களைச் சுற்றி நின்று வேடிக்கை பார்ப்பார்கள். லட்டை வாங்கவும் வாங்குவார்கள்.

இந்த லட்டு வியாபாரத்தைத் தான் இந்தியாவில் நடத்துவதற்கு மூன்று வெள்ளைக்காரர் டில்லி நகர்ப்பக்கம் வந்து பல பாகங்களிற் கடை வைத்தார்கள். காந்திஜியும் காங்கிரஸும், லட்டு நன்றாகத்தான் இருக்கின்றது; ஆனால் அதிற் கசப்பு தட்டுகின்றது என்று சொல்லிவிட்டார்கள். பதம் பிழைத்துப்போய் விட்டதென்று பத்திரிகைகள் தீர்த்தன. ஆனால் இந்த லட்டு ஜின்னா சாஹிப் என்பவருக்கு மதுரமாகவிருக்கின்றது!!

வெள்ளைக்காரக் கழைக்கூத்தாடிகள், இந்தியாக்காரரின் கயிற்று வித்தையையும் இன்று உச்சியதே ஒரு விசித்திரம். இம் மூன்று வித்தைக்காரர்களும் இந்தியாவுக்கும் உலகத்துக்கும் கயிறுவிட்டார்கள். ஆயிரம் பதினாயிரமென்று இந்தியாப் பணத்தைப் பசியாறினார்கள். பின்னர் சீமைக்குக் கம்பி நீட்டி விட்டார்கள். திரும்பவும் வரப் போகின்றார்கள்.

### எப்போ வருவாரோ?

வெள்ளைக்காரரின் ஜாலவித்தையைப் பற்றி எழுதும்போது நேதாஜி சுபாஷ் போஸின் சிரஞ்சீவி மரணம் நினைவுக்கு வருகின்றது. சமீபத்தில் சிங்கப்பூரிலிருந்து வந்த அறிஞர் ஒருவருடன் பேசிக்கொண்டிருந்தேன். அப்போது சுபாஷ் பற்றியும் பேச்சு எழுந்தது. “சிங்கப்பூரில் போஸைக் கண்டீர்களா?” என்றேன்.

“ஆமாம், நான் அவரின் அருகில் நின்றேன். அவருடன் சம்பாஷித்துமிருக்கின்றேன். ஆனால் எனக்கு அவர், வங்கத்து வீர சுபாஷ் போலத் தோன்றவில்லை. நான் கண்ட போஸ் கட்டுமஸ்தான பேர்வழி. பலம் மிகுந்தவர். வயதிற் குறைந்தவர் போலக் காணப்படுகின்றார். இந்தியர், வீதிகளிற் பட்டினியாற் செத்துக்கொண்டிருந்தபோதிலும் இந்த போஸ் அவர்கள்மீது இரக்கங் காட்டவில்லை. இது எங்களுக்கெல்லாம் ஆச்சரியத்தைக் கொடுத்தது. போதாக்குறைக்கு இவர் ஜப்பானியரின் கைப்பொம்மையாகவே மாறியிருந்தார். சுபாஷ் பேசும்போது ஜப்பானிய இராணுவ அதிகாரிகள் அவருடைய பேச்சுக்களைச் சொல்லுந் தவறாமல் எழுதினார்கள்.

### போலி போஸ்!

“இந்தச் சுபாஷுடன் அதே வீட்டில் வசித்த ஓர் அன்பர் எனக்குக் கூறிய விஷயம் எனது சந்தேகத்தைத் தீர்த்தது. இவருக்குப் போஸ் தமது பழைய சீவியத்தைப்பற்றியோ வாலிப கால ஞாபகங்களைப் பற்றியோ யாதொன்றும் பேசியதில்லையாம். ஜப்பான் ஆட்சி சிங்கப்பூரில் ஓய்ந்தவுடன் நேத்தாஜி போஸ் என்பவரும் மறைந்ததே ஒரு மர்மம். சிறைவாசமும், இடையிடையே பீடித்த நோய்களும் போஸின் தேகபலத்தைக் குன்றச் செய்தது. ஆனால் நேதாஜி போஸ் சிங்கம் போலக் கர்ஜனை செய்துகொண்டிருந்தார். இவற்றையெல்லாம் எங்களால் நம்ப முடியவில்லை. உண்மையான போஸ் உண்மையாகவே மறைந்துவிட்டார் என்றும் நேதாஜி ஒரு போலி போஸ் என்பதே எமது நம்பிக்கை”. இப்படி அவர் தெரிவிக்கின்றார். ஆனால் இந்திய மக்கள் ஒவ்வொரு கணமும் சுபாஷ் போஸின் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். எப்போ வருவாரோ— எங்கள் கலி தீர்க்க?

### அது என்ன (து) ரோகம்?

நிலாவரைத் திட்டத்தை மட்டந்தட்டுவதற்குச் சில துரோகிகள் முனைந்து நிற்பதாகத் தெரிகின்றது. இது ‘பெரிய துரோகம்’ என்று துண்டுப்பிரசுரங்கள் காற்றுடன் கூடிக் கதறுகின்றன. சுத்தமான நீர் வெளியேசென்றபின் உப்புநீர் மேலே வருகின்றது. இதுகாரணமாகத் திட்டம் தோல்வியுறப் போவதில்லை. குறித்த கன அளவு சுத்த நீரை இறைத்த பின் அதே அளவு மீண்டு ஊறத்தக்கமுறையில் அரசாங்கம் வேறு யந்திரம் அமைத்து இறைக்கப் போகின்றதென அறிகின்றேன். கிடைக்கும் சுத்த நீர் எவ்வளவு பரப்பு நிலத்துக்குப் போதுமானதோ அவ்வளவு விஸ்தாரண பூமியிலே பயிர்பச்சையை உண்டாக்க வசதிகள் செய்யப் போகின்றனர்.

எடுத்ததுக்கெல்லாம் குறை கூறுவதும், சதிசெய்வதும் யாழ்ப்பாணத்தவர்களின் பாவனிக் குணமாகி இப்போது அது ஒரு வியாதியாகியும் மாறிவிட்டது. ஆகவே, துரோகம் ஒருவித ரோகமாகும்.

### தனக்கறியாச் சிங்களம்

இதற்கிடையில் ஸ்ரீ சில்வா என்ற ஒரு சிங்கள ‘மினிஸ்’ பத்திரிகையில் ஏதோ எல்லாம் உளறுகின்றார். நிலாவரைத்திட்டம் ஒன்றுக்கும் உதவாதென்பதை இப்போது அரசாங்கம் உணர்ந்து விட்டதென்றும் “மடைச்சனங்களுக்கு நாங்கள் சொன்னது மூளையில் ஏறவில்லை”யெனவும் நீர்ப்பாசனப் பகுதித்தலைவர் தமக்குத் தெரிவித்ததாக அவர் பசப்புகின்றார். ஆண்டுக்கணக்காகப் புத்தூரிலுள்ள அதலபாதாளக் கிணற்று நீரை ஒருவரும் பருகவில்லையாம். பிரதிவருடமும் அதற்குள் இரண்டு மூன்று பிரேதங்கள் மிதப்பதால் அது ‘தற்கொலைக் காரரின் சுவர்க்கம்’ என்று கூறப்படுவதாகவும் அசட்டுத்தனமாக எழுதுகின்றார். திட்டத்துக்கு உலை வைக்க முயலும் இம் மேதாவியை நிலாவரைக் கழைத்துத் தலைமுழுக்குக் கொடுத்தால் சுயபுத்தி வரக்கூடும்.

### மகாஜனக் கல்லூரி

இலட்சிய வாழ்வின் சின்னமாக, மகாஜனக் கல்லூரி திகழ்கின்றதென அறிஞர் ஒருவர் கடந்த வாரம் கல்லூரியின் ஸ்தாபகர் விழாவின்போது குறிப்பிட்டார். ஆமாம், அக்கல்லூரி உன்னத இலட்சியத்தை நிறைவேற்றி வருவதுமன்றி யாழ்ப்பாணத்திலுள்ள ஏனைய கல்லூரிகளுக்கு வழிகாட்டியாகவுமிருக்கின்றது. இக்கல்லூரியின் திறமை மிகுந்த அதிபரும் அவருக்குக் கிடைத்திருக்கும் ஆசிரியர்களும் கல்லூரியின் வளர்ச்சியில் அக்கறையுள்ளவர்கள். யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு சில கல்லூரிகளிற் சுழியோட்டங்களும் பிறின்சிப்பல் வேலைக்குப் போட்டிகளுமே நடைபெறுகின்றன. ஆனால் மகாஜனக் கல்லூரி, மக்களின் அன்பைப்பெற்று மாண்புடன் விளங்குகின்றது! அது வாழ்க!!

### இந்துக்கல்லூரி ‘காணிவெல்’

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியினதும், இந்துப் பெண்கள் கல்லூரியினதும் களியாட்ட விழா அடுத்தமாதம் 5-ந் திகதி ஆரம்பமாகும். இந்துப் பெண்கள் கல்லூரியின் வளர்ச்சிநிதிக்காக ஏற்பட்டிருக்கும் இக் ‘காணிவெல்’ அற்புதமாக ஒழுங்கு செய்யப்படுகின்றது. மதுரகான இசைவாணி வசந்தகோகிலத்தின் இசைக்கச்சேரியும் உண்டு. களியாட்ட விழாவைக் கண்டுகளிக்கத் தயாராகிக் கொள்ளவேண்டுமல்லவா?

## இலவசக் கல்வி வரப்பிரசாதம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

க்காரக் கும்பலும் சார்ந்த உரிமைகளை அனுபவிப்பவர்களும் ‘குய்யோ முறையோ’ என்று கூச்சலிடுகின்றனர். ஆனால் நாட்டுமக்கள் இலவசக்கல்வி ஒரு வரப்பிரசாதமெனக் கருதி மகிழ்கின்றனர்.

“ஒரு பெரிய மனிதன் தங்கள் பணமெல்லாம் இந்தமாதிரி வீணாகின்றதே என்று எனக்குக் கூறி வருத்தப்பட்டார். இலங்கையில் உள்ளவர்களில் அதிக தொகையினர் பௌத்தர்களும் இந்துக்களும் என்ற உண்மையை இவரால் உணரமுடியவில்லை. இவர்களைத்தான் இலங்கையின் எதிர்காலப் பிரதம மந்திரி தமது பேழைக்குள் அடைக்கலம் புகும்படி கேட்கின்றார். ஐந்தாறு இங்கிலீஷ் படித்துவிட்டு இப் பிரகிருதிகளெல்லாம் சொகுசாக வாழ விரும்புகின்றனர். தேசியம், தேச சேவை, என்று அழகாகச் சிலர் பேசிக்கொண்டு அவர்களுக்கு எதிராக வேலைசெய்யும்போது அவர்களைப் பார்த்து “போதும், போதும்! உங்கள் வண்டவாளங்களை நிறுத்துங்கள்” என்று நாங்கள் கூறவேண்டும். எமது கல்விமுறைகளைச் சீராக அமைப்போமாகில் நாட்டின் வருமானத்தில் மூன்றில் இரண்டு பாகத்தை விழுங்கும் பகிரங்க சேவைப் பகுதியினரை ஒதுக்க முடியும். சமூக சேவைக்கென எஞ்சிய பணந்தான் செலவாகின்றது. எமது நாட்டின் எதிர்காலம் தலைவர்களிலே தங்கியிருக்கவில்லை. எமது பிள்ளைகளிலே தான் யாவும் தங்கியிருக்கின்றதென்பதை யுணருங்கள். ஏற்றத்தாழ்வான முறையிற் பணஞ் செலவாகுவதை நாங்கள் தடுக்கவேண்டும். சகல மக்களும் தமது நாயகத்தன்மையைப் பூரணமாகப் பொலியச்செய்வதற்குக் கல்வியும் அதற்கேற்ற முறையில் அமையவேண்டுவது அவசியமாகும். இதுதான் எனது வேண்டுகோள்.”

ஈழகேசரி ஆசிரியர் ஸ்ரீ நா. பொன்னையா கூறியதாவது:

“இலட்சியமும் உன்னத நோக்கமுங் கூடிய வாழ்க்கையே மேம்பாடுடையது. அதே போன்று இக் கல்லூரியின் ஸ்தாபகரும் இக்கல்லூரி மூலம் தமது வாழ்க்கையின் இலட்சியத்தைப் பூர்த்தி செய்திருக்கின்றார். அவருடைய தியாக வாழ்க்கை எமக்கெல்லாம் வழிகாட்டுகின்றது. அது செய்ய வேண்டும் இதுசெய்ய வேண்டும் என்று நாங்கள் பேசுகின்றோம். அடுத்த கணம் அனைத்துங் காற்றோடு பறந்து விடுகின்றன. இக் கல்லூரிக்கு இன்று அநேக தேவைகள் இருக்கின்றன. விஞ்ஞான கூடம், நூல் நிலையம் தொழிற்கல்விக்கான உபகரணங்கள் யாவும் கல்லூரியின் வளர்ச்சிக்கு இன்றியமையாத தேவைகளாகும். இங்கு கூடியிருக்கும் இத்தனை அன்பர்களும், தாராளமாகப் பணம் உதவுவார்களாகில் மகாஜனக்கல்லூரி ஓர் சிறந்த ஸ்தாபனமாக மிளிரும் என்பதற்குச் சந்தேகமில்லை.

கல்லூரி விழாவிற்குப் பெற்றோரும் பழைய மாணவரும் பிரமுகர்களும் பெருந்தொகையிற் பங்குபற்றிச் சிறப்பித்தனர். கல்லூரி ஆசிரியர் ஸ்ரீ R. நடராசா B. SC., அனைவருக்கும் நன்றி கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியா

# காங்கிரஸ் மறுப்பு

## மீண்டும் அதிகாரவர்க்க ஆதிக்கம்

"இந்தியா விரைவிற் சுதந்திரம் பெறுவதற்கான முயற்சிகளையும் உதவிகளையும் செய்வதற்காக எனது சகாக்கள் இந்தியா செல்லுகின்றனர். இந்திய மக்களைச் சுதந்திரம் அடையச்செய்வது எமது கடன்"

—பிரதமர் அட்லி

இந்தியாவைச் சுதந்திர பூமியாக மாற்ற விரும்பிய அட்லி அரசாங்கம் மூன்று மந்திரிகளை மார்ச் மாதம் இந்தியாவுக்கு அனுப்பியது. அம்மூவரும் மூன்றுமாத காலமாக இந்தியத் தலைவர்களுடன் கலந்தாலோசித்தனர்; ஈற்றில் தற்காலீகக் கண்காணிப்பு அரசாங்கத்திடம் இந்திய நிர்வாகத்தை ஒப்படைத்துவிட்டு ஊர் திரும்பிவிட்டனர். ஆகவே, புதிய இடைக்கால அரசாங்கம் ஒன்று ஏற்படும்வரை இந்தக் கண்காணிப்பு நிர்வாக முறை இந்தியாவில் நிலவும்.

தூதுக் கோஷ்டியினரின் இடைக்காலத் திட்டத்தை காங்கிரஸ் ஒதுக்கித் தள்ளிவிட்டு நீண்டகாலத் திட்டத்தை ஏற்றிருக்கின்றது. சுதந்திர இந்தியாவின் புதிய அரசியலை வகுப்பதற்காக ஏற்படுத்தப்படவிருக்கும் அரசியல் நிர்ணய சபையிற் கலந்து கொள்வதற்குக் காங்கிரஸ் முடிவு செய்துள்ளது. இதற்கு காந்திஜியும் தமது பூரண ஆசியையும் ஆதரவையும் அளித்திருக்கின்றார். காங்கிரஸ் எவ்வித திட்டத்தை ஏற்றாலும் அதற்கு ஒரு காரணம் அடிப்படையாகவேயிருக்கும். அதுதான் இந்தியாவின் சுதந்திரம். திட்டத்திற் சுதந்திரம்பெற வழியிருப்பின் அதை ஏற்பார்கள். அதை நிராகரித்தாலும் சுதந்திரம் பெறுவதற்காகத்தான் நிராகரிப்பார்கள். இதுவரைகாலமாக பிரிட்டனுடன் பேச்சுவார்த்தைகள் நிகழ்த்திவந்த காங்கிரஸ் இந்தியாவின் சுதந்திரத்தையே குறிக்கோளாக வைத்திருந்தார்கள். அதேபோல பிரிட்டனும் சதா இந்தியாவைத் தனது கைக்குள் வைத்திருக்கவே பிரயத்தனங்கள் செய்துகொண்டிருக்கிறது.

தகுந்த மூன்று காரணங்களைக்காட்டிக் காங்கிரஸ் இடைக்கால அரசாங்கத்திற் கலந்து கொள்ள மறுத்தது. உண்மையாகவே இந்திய மக்களிடம் அதிகாரத்தைக் கொடுப்பதற்கு பிரிட்டன்விரும்பியிருக்குமாயின் காங்கிரஸின் கோரிக்கைகளுக்கு இணங்கியிருக்கலாம். வகுப்புவாத ஸ்தாபனமான முஸ்லீம் லீக்கைச் சமாதானப்படுத்துவதற்காகத் தேசிய முஸ்லீம்களை இடைக்கால அரசாங்கத்திற் சேர்க்க இராஜப்பிரதிநிதி மறுத்துவிட்டார். காங்கிரஸ் ஒரு தேசிய ஸ்தாபனம். அப்படியிருந்தும் அதன் செல்வாக்கையுணரப் பிரிட்டன் மறுத்துக் கொண்டிருக்கின்றது.

தவிர இடைக்கால அரசாங்கத்திற் சேர்ந்து உழைக்க முன்வந்த அத்தனை பேருக்கும் பொது இலட்சியம் எதுவும் இருக்கவில்லை. பொது இலட்சியம் இல்லாதவிடத்து நிர்வாகத்தை வெற்றிகரமாக நடத்த முடியாது. யுத்த காலத்தில் பிரிட்டனின் அரசாங்கத்தை நிர்வகித்த அத்தனைபேரும் எதிரியை முறியடிக்க வேண்டுமென்ற ஒரேநோக்குடன் உழைத்தனர். அதில் வெற்றியும்பெற்றார்கள். அவ்விதமான பொது இலட்சியம் இடைக்கால அரசாங்கத்தில் காங்கிரஸ் எதிர்பார்க்க முடியாது. ஆகவேதான், காங்கிரஸ் இதிற் கலந்துகொள்ள மறுத்துவிட்டது. காங்கிரஸ் நிர்வாகத்தை ஏற்க மறுத்ததைக் கண்ட பிரிட்டன் விரும்பினால் முஸ்லீம் லீக்கிடம் இடைக்கால அரசாங்கத்தை ஒப்படைத்திருக்கலாம். காங்கிரஸும் அம்முடிவை வரவேற்றிருக்கும். ஆனால் ஏகாதிபத்தியத் திமிர்கொண்ட பிரிட்டன் அதிகார வர்க்கத்திடம் தற்காலீகக் காண்காணிப்பு வேலையை ஒப்படைத்திருக்கின்றது. ஆகவே, இந்தியா சுதந்திரம் பெறுவதை பிரிட்டன விரும்பவில்லையென்பது வெளிப்படை.

காங்கிரஸ் காலவரையற்றுத் தூதுக்கோஷ்டியுடன் பேச்சுவார்த்தைகள் நிகழ்த்துவது பிழையெனவும் மந்திரிமார் அளித்த திட்டத்தைக் குப்பைத்தொட்டிக்குள் எறிந்துவிட்டுக் காங்கிரஸ் பயனுள்ள வேலைகளிற் கவனஞ் செலுத்துவதே கௌரவமானதெனவும் செல்வாக்கு மிகுந்த பல வடஇந்தியப் பத்திரிகைகள் வற்புறுத்தின.

ஆனால், இப்போது நிகழ்ந்ததென்ன? பிரதிநிதித்துவமற்ற பொம்மை அரசாங்கம் மீண்டும் இந்தியாவில் தலையெடுத்திருக்கின்றது. இது நீடிக்கப்பட்டிருப்பதால் மக்களின் அதிருப்தியும் மனக்கசப்பும் அதிகரித்துக் கொண்டே போகும். இதுகாரணமாக இந்தியாவின் எதிர்கால அரசியலை வகுப்பதற்காக ஏற்படுத்தப்படும் அரசியல் நிர்ணய சபையின் முயற்சிகளும் அதிகமாகப் பாதிக்கப்படும்.

அகிலஉலகமும் மதிக்கக்கூடிய சுதந்திர ஆட்சியையே இந்தியா விரும்புகின்றது. இதற்காகத் கடந்த அறுபது வருட காலமாகத் தர்மமான முறையில் உழைத்தும் வருகின்றது. நாட்டின் சகல மக்களுக்கும் சமஅந்தஸ்தும் சமஉரிமைகளும் வழங்காத அரசாங்கமும் ஓர் அரசாங்கமாதமா? பிரிட்டனின் புதிய திட்டம் மாகாணங்களைப் பல்வேறு கோஷ்டிகளாகப் பிரித்திருப்பதுமன்றி மத்திய அரசாங்கத்தின் அதிகாரங்களையும் வரையறை செய்திருக்கின்றது. ஒரு குடம் பாலுக்குள் ஒரு துளி நஞ்சு விட்டால் அது பாலாகமாட்டாது. கண்களை விற்றுச் சித்திரம் வாங்குவதை முஸ்லீம் லீக் விரும்பியபோதிலும், காங்கிரஸுக்கு இது கட்டோடு பிடிக்கவில்லை. இதுதான் லீக்கிற்கும் காங்கிரஸுக்குமுள்ள வித்தியாசம்.

இந்தியா விஷயமாக ஈழகேசரி (16-6-46) இதழில் எழுதும்போது பின் வருமாறு குறிப்பிட்டிருந்தேன்:

"இடைக்கால அரசாங்கம் அமைக்கும் விஷயத்திலாவது ஒரு திருப்திகரமான முடிவு ஏற்படுமாகில் திட்டத்தையேற்று ஏனைய விலங்கங்களைப் போக்குவது சாத்தியமாகும். காங்கிரஸ் காட்டும் நியாயமான வழிகளைப் பின்பற்றிப் பிரிட்டன் விமோசனம் அளிக்க முற்படலாம்? அப்படியில்லையென்று கைவிரி தர்பாரை மீண்டும் நிகழ்த்துமாகில் அதனால் ஏற்படும் விலங்கங்களையும் அனுபவித்தே தீர வேண்டும்".

இப்போது நடந்ததென்ன? தூதுக் கோஷ்டியினர் அடிமை இந்தியாவை அதேநிலையில் இருக்கச் செய்துவிட்டு ஊர் திரும்பியிருக்கின்றனர். இவர்கள் இந்திய அரசியல் நிலைமைபற்றி விபரமாக அட்லி அரசாங்கத்துக்குத் தெரிவிப்பார்கள். பின்னர் மீண்டு இந்தியா திரும்புவார்களாம்.

றப்பரும், தகரமும், எண்ணெய்வகைகளும் கிடைத்துவிட்டால் பிரித்தானிய ஏகாதிபத்தியம் தங்குதடையின்றி உருண்டு செல்லுமென அட்லி அரசாங்கமும் கருதுகின்றதா என்ன? மனிதத்தன்மை இல்லாத ஆட்சி ஒருபோதும் உலகில் நிலைபெறமாட்டாதென்பதை பிரிட்டன் உணர்ந்து இந்தியாவுக்கு விரைவில் விமோசனம் அளித்தாலன்றி உலகு உய்யமாட்டாது.

இ. அ.

# ஏகாதிபத்திய ஆர்ப்பாட்டம்

## யூத-அராபிய தகராறு

S. K. கந்தையா

யுத்தம் ஒய்ந்த பின்பும் உலகத்தில் இன்னும் அமைதி நிலவவில்லை. தென் ஐரோப்பாவிலும், மத்திய கிழக்கிலும், தென்கிழக்கு ஆசியாவிலும், தூர கிழக்கிலும் நெருக்கடியான நிலை நிலவுகின்றது. தினசரிப் பத்திரிகைகளைப் படிப்போமானால் ஸ்பெயின், இத்தாலி—யூகோஸ்லாவியா, கிரீஸ், பர்மா, மலாயா, பாலஸ்தீனம், ஈரான், இந்தியா, இந்தோனேஸியா, சீனு ஆகிய இடங்களில் அரசியல் அமைதியின்மையையும், எதிர்காலத்தைப் பற்றிய ஏமாற்றத்தையும் நாம் காண்கின்றோம். யுத்தத்திற்குப் பின்னும் யுத்த முஸ்தீப்புக்கள் தொடர்ந்து நடைபெறுகின்றன. எதற்காக இவ்வளவு ஆர்ப்பாட்டங்கள்?

### பாலஸ்தீனம்

ஏகாதிபத்தியமும் எதேச்சாதிகாரமும் உலகத்தை இன்னும் விட்டுத் தொலையாததே இந்நிலைக்குக் காரணம். சென்ற வாரச் செய்திகள் பாலஸ்தீனத்தின் இன்னல் மிக்க நிலைமையை வற்புறுத்துகின்றன. பிரித்தானிய அரசாங்கத்தால் யுத்தத்திற்கு முந்திய காலத்தில் வெறுக்கப்பட்டுத் தேடப்பட்ட மகா மூப்தி பாலஸ்தீனிய அராபிய தலைவன் மத்திய கிழக்கிலும் பிரித்தானிய அரசாங்கத்திலும் சென்ற இரு வாரங்களிலும் ஓர் பரபரப்பையுண்டாக்கி விட்டார். பரிஸ் நகரத்தின் பாதுகாப்பில் வைக்கப்பட்ட இவர் சடுதியில் மறைந்து பின் எகிப்து மன்னன் மாளிகையில் அடைக்கலம் புகுந்து விட்டாரென்ற செய்தி மத்திய கிழக்கு அராபியரிடையில் குதூகலத்தையும் பிரித்தானிய அரசாங்கப் பகுதிகளில் கிலேசத்தையும் உண்டுபண்ணியது.

பிரித்தானியரால் இவர் வெறுக்கப்பட்ட காரணம் யாது? பாலஸ்தீனம் என்ற தேசத்தில் யூதர், அராபியர் என்ற இரு சாதிகள் இருக்கின்றனவென்பதும் இவர்களுக்கிடையே இடைவிடாத எதிர்ப்பு இருந்துவருகிறதென்பதும் எல்லோருமறிந்த உண்மை. இந்த எதிர்ப்பு யுத்தத்திற்குப் பின்பு இன்னும் அதிகரித்துவிட்டது. சில மாதங்களுக்கு முன்பு நியமிக்கப்பட்ட ஆங்கில-அமெரிக்க விசாரணைச் சபை ஒன்று பாலஸ்தீனம் விஷயத்தைப் பரிசீலனை செய்து, ஓர் அறிக்கையை வெளியிட்டது. அதில் 1,00,000 யூதர்களை பலஸ்தீனத்தில் உடனே குடியேறவிட வேண்டுமென்று கண்டிருந்தது. பலஸ்தீனத்தில் தற்போது வலிமைபெற்று வரும் அராபிய-யூத எதிர்ப்புக்கு இவ்வறிக்கையே உடனடிக் காரணம். யூதர்களை இன்னும் அதிகமாகப் புகுத்தித் தங்கள் நாட்டில் தங்களைச் சிறுபான்மையினராக்கப் போகிறார்களே என்ற பயத்தால் அராபியர் யூதர்களை எதிர்த்தனர். 1,00,000 யூதர்களை உடனே பாலஸ்தீனத்தில் குடியேற விடுவதால் தங்களுக்கு நன்மை வந்துவிடப் போகிறதில்லை, பாலஸ்தீனத்தைத் தங்களின் அரசாக்கிவிடவேண்டுமென்பதே யூதரின் கோரிக்கை. ஆங்கிலோ-அமெரிக்க அறிக்கை அராபியருக்குப் பாதகமானது என்பது அராபியர் கருத்து. அறிக்கையின் சிபார்சு நிலையை நிவிர்த்திக்காது என்பதே யூதர் முறைப்பாடு. இருவருக்குமிடையே அதிருப்தியை அதிகரித்துத் தமது ஆட்சியை ஸ்திரப்படுத்த எத்தனிக்கிறது ஆங்கில—அமெரிக்க ஏகாதிபத்தியம் இந்நிலையில் மகா மூப்தி மத்திய கிழக்கில் வெளிப்பட்டார் என்ற செய்தி பிரித்தானிய ஏகாதிபத்தியத்திற்கு மனக்குழப்பத்தை உண்டாக்கியது.

### ஹிட்லரின் அடிச்சுவடு

இவ்விதம் யூதருக்கும் அராபியருக்குமிடையில் மனக்கொதிப்பை வளர்த்துவிட்டால் பாலஸ்தீனத்தைத் தனது ஆதிக்கத்தில் வைத்திருக்கலாமென ஏகாதிபத்தியம் கனவு காண்கின்றது. எவ்விதம் ஹிட்லர் யூதத் துவேஷப் பிரசார மூலம் தனதும் தன் சகாக்களினதும் ஏகாதிபத்திய நோக்கங்களை அடைய எத்தனித்தானோ, அதுபோல யூத அனுதாபம் என்ற பாசாங்குப் பிரசாரத்தின் மூலம் ஆங்கில ஏகாதிபத்தியமும், விசேஷமாக அமெரிக்க ஏகாதிபத்தியமும் தனது நோக்கங்களை மத்திய கிழக்கில் அடைய எத்தனிக்கின்றது. ஹிட்லரின் யூதத் துவேஷத்திற்கும் ஆங்கில—அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் யூத அனுதாபத்திற்கும் ஓர் வித வித்தியாசமிருந்தாலும் நோக்கமும் பலனும் ஒன்றே- நோக்கம் தங்கள் ஆதிக்கத்தை நிலை நிறுத்துவது; பலன் ஏகாதிபத்தியத்தின் ஆதிக்கத்தின் கீழ் அல்லற்படும் ஜாதிகளிடையே பிரிவினையும், பரஸ்பர எதிர்ப்பும், பலவீனமும் ஏகாதிபத்தியத்தின் வெற்றியுமே. பிரித்தாளும் ஏகாதிபத்திய தந்திரத்தின் ஓர் வழியே பாலஸ்தீனத்திலும் கையாளப்படுகிறது.

### "யூத ஆதரவு" எதற்காக?

பாலஸ்தீனத்தில் யூதர்களைக் குடியேற்றி அவர்களின ஜனத்தொகையை 11 சத விகிதத்திலிருந்து $33\frac{1}{2}$ விகிதத்துக்கு அதிகரித்த செய்கை ஆங்கிலோ-அமெரிக்க ஏகாதிபத்தியம் சென்ற இருபது வருஷங்களாகக்கையாண்ட கொள்கையின் பலனாகும்.

இவ்விதம் ஆதரவின் பேரில் யூதரை பாலஸ்தீனத்தில் குடியேற்றுவதற்குக் காரணங்கள் இரண்டு. முதலாவது சரித்திர சம்பந்தமுள்ள ஓர் உணர்ச்சி. இரண்டாவது தற்கால அரசியல் உலகத்தின் அம்சமாகிய ஓர் உண்மை. பாலஸ்தீனம் யூதரின் புராதன தேசமாக விருந்தது உண்மையே. இச்சரித்திர உண்மையை அடிப்படையாக வைத்து இதிலிருந்து எழுகின்ற இயற்கை உணர்ச்சியை ஏகாதிபத்தியம் தனது நோக்கத்திற்காக உபயோகிக்கிறது. இவ்விதம் உபயோகிப்பதற்கு இரண்டாம் காரணமாகிய அரசியல் உண்மை மிகவும் அனுகூலமாக விருந்தது. தற்கால அரசியல உலகின் ஓர் அம்சமாகிய இந்த உண்மையைப் பொதுவாக "சையனிஸம்" (Zionism) என்று சொல்லுவார்கள். இப்பெயரைக் கொண்ட "சையனிஸ்ட் இயக்கம்" (Zionist movement) பிரதானமாக அமெரிக்காவிலும் பிரித்தானியாவிலும் வேரூன்றியிருந்தது. இவ்வியக்கத்தின் தலைவர்கள் இவ்விரு தேசங்களின் செல்வந்தர் குழாமில் அடங்கியிருக்கிறார்கள். இக்காரணத்தால் ஆங்கில அமெரிக்க ஏகாதிபத்திய சக்திகளுடன் இணைக்கப்பட்டு அவைகளின் துணைச்சக்திகளாக விளங்கினர் இவ்யூதத் தலைவர்கள்.

சையனிஸ்ட் இயக்கத்தை ஆதரித்தால் ஏகாதிபத்தியம் அதன் தலைவர்களை உயிர்த் துணைவர்களாகப் பெற்று, உணர்ச்சியை உபயோகித்துப், பாலஸ்தீனத்தைத் தனது அடிப்படைஸ்தானமாக மத்திய கிழக்கில் பெறமுடியும். யூத ஆதரவென்ற தம்பட்டத்திற்கு இந்த ஏகாதிபத்தியமே மூலகாரணமாகவிருக்கின்றது.

### மத்திய கிழக்கில் எழுச்சி

பாலஸ்தீனத்தைத் தனது அடிப்படை ஸ்தானமாக்க ஏகாதிபத்தியம் விரும்புவதற்கு இன்னும் ஓர் காரணமுண்டு. அராபிய உலகில் ஓர் எழுச்சியும் சுதந்திர இயக்கமும் வளர்வதே இக்காரணம். எகிப்தில், சீரியாவில், லெபானோனில், ஈராக்கில் தேசீய இயக்கம் வளர்ச்சிபெறுவதைக் கண்ட ஆங்கிலோ—அமெரிக்க ஏகாதிபத்தியம் தனது உயிர் ஸ்தானங்களிலொன்றாகிய மத்திய கிழக்கு தனது பிடியினின்றும் வழுவி விடுமோவெனப் பயப்படுகிறது. இப்பயத்தினால் தான் மத்திய கிழக்கில் தனது பொம்மைகளாகக் கூடிய சக்திகளுடன் சிநேகம் வைத்திருக்கிறது. ஈராக்கில் தற்போது அரசியல் அதிகாரம் செலுத்தும் தலைவர்கள், சேனநாயக்கா போன்ற ஏகாதிபத்திய தாசர்கள். அதுபோலவே டிரான்ஸ்ஜோர்டன் என்னும் தேசத்திலும் சில ஏகாதிபத்திய தாசர்கள் அதிகாரம் வகிக்கிறார்கள். எகிப்திலும் அரசியலதிகாரம் வகிக்கும் தலைவர்கள் பிற்போக்குவாதிகளே. இவர்களின் உதவியைக்கொண்டு மத்திய கிழக்கிலே எழுகின்ற சுதந்திர இயக்கத்தை அடக்குவதற்கு பிரித்தானிய ஏகாதிபத்தியமும் அதன் முத்தண்ணாவாகிய அமெரிக்க ஏகாதிபத்தியமும் கங்கணம் கட்டுகின்றன. பாலஸ்தீனத்தில் கூட்டுச் சபையின் பரிசீலனை மூலமும், டிரான்ஸ்ஜோர்டனில் போலிச் சுதந்திர மசோதாமூலமும் எகிப்தில் "பட்டாள வெளியேற்றம்" என்ற சொற்பிரசாரமூலமும் ஆங்கில ஏகாதிபத்தியமும் அமெரிக்க ஏகாதிபத்தியமும் தனித்தும் ஒருமித்தும் சுதந்திர இயக்கத்தை அடக்க முயல்கின்றன.

### ஈரான்

இவ்வித நோக்கங்களுடன் மத்திய கிழக்கில் தலையிட்டுக் கொண்டிருக்கும் ஆங்கில அமெரிக்க ஏகாதிபத்தியம் ஈரானிலும் தனது முயற்சிகளைக் கையாள எத்தனித்தது.

ஈரான் சுதந்திர தேசமாக மதிக்கப்பட்டுவந்த போதிலும், அதன் அரசாங்கம் அன்னிய ஏகாதிபத்தியத்தின் கூலியாகவே இருந்து உழைத்து வந்தது. யுத்தத்திற்கு முன்பு பிரித்தானிய அமெரிக்க எண்ணெய் முதலாளிகளுக்கு வசதிகள் கொடுத்ததன் பலனாக தென் ஈரான் ஆங்கில அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் இரும்புப் பிடிக்குள் அகப்பட்டது. இவ்விரும்புப்பிடியை ஈரான் முழுவதிலும் ஸ்தாபிப்பதற்கு ஆங்கில—அமெரிக்க ஏகாதிபத்தியம் யுத்தத்திற்கு பின்பு எத்தனித்தது.

இந்நோக்கத்திற்கு அனுகூலமாகச் சென்ற வருஷத்தில் ஈரான் ஓர் பிரித்தானிய ஏகாதிபத்திய தாசனாகிய, எல்ஹக்கீமி என்பவனால் ஆளப்பட்டது. அவன் பிரதம மந்திரியாகவிருந்து ஏகாதிபத்தியத்திற்குச் சார்பாகப் பிற்போக்கு ரீதியிலும் ஈரானிய அரசாங்கத்தை நடாத்திவந்தான். ஹக்கீமி பிரதமமந்திரியாக விருந்த காலத்தில் தான் உலகமெங்கும் அடிபட்ட அசெபர் ஜேனியன் பிரச்சனை கிளம்பியது. ஹக்கீமி தன் பிற்போக்கு எண்ணத்திற்கு இணங்க அசெபர் ஜேனியன் பிரச்னையைத் திரித்து ஆங்கிலோ—அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் மனம் குளிர சோவியத் எதிர்ப்புப் பிரசாரமாக்கினன். சோவியத் படைகளின் தூண்டுதலில் அசெபர்ஜேனிய மக்கள் கலகம் தொடங்குகிறார்கள். சோவியத் நாடு ஈரானிய உள்நாட்டுவிவகாரங்களில் தலையிட்டு ஈரானிய சுதந்திரத்தை ஹிம்சிக்கிறது என்ற கருத்துப்பட ஹக்கீமியும் அவனது சகாக்களும் பிரசாரம் நடத்தினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியருக்குக் கடிதங்கள்

# இலங்கை முஸ்லீம்களுக்கு ஓர் வேண்டுகோள்

நாம் மதத்திற்காக எவ்வளவோ போராடுகிறோம்; ஆனால் தேசத்திற்காக எதுவுஞ் செய்வதில்லைப் போலிருக்கிறது. தன்நலம் கருதி இலங்கை முஸ்லீம்களை அவர்களுக்கு பக்கபலமாக்கிக்கொள்ளும் பொருட்டு பாக்கிஸ்த்தான் பிளவை சில இந்தியர்கள் இங்கே புகுத்த பார்க்கிறார்கள். இந்தியாவில் பாக்கிஸ்த்தான் கேட்க 10 கோடி முஸ்லீம்கள் இருக்கிறார்கள். இங்கேயோ நாம் 10 ல் ஒரு பாகத்தினராகவிருக்கிறோம். அதிலும் கல்வியில் இப்போது தாய்ப் பாஷையாக கொண்டாடும் தமிழில் பிற்போக்கடைந்துள்ளோம். நமது சகோதரிகளை அன்னிய நாகரிகத்தில் மூழ்க வைக்கிறோமல்லாமல் மார்க்க வழிகளை பின்பற்றவோ, இனிய தமிழையோ, புகட்டுகிறோமில்லை. கடந்த 800 வருடங்களாக இலங்கை முஸ்லீம்கள் ஏனைய சமூகத்துடன் சேர்ந்து வாழ்ந்தார்கள். வியாபாரமுறையில் நற்கியாதி பெற்றார்கள். எவ்வளவு முற்போக்காக விருந்தார்களோ, அவ்வளவு பிற்போக்கடைந்து வருகிறார்கள். நாயகம் நபி(ஸல்) அவர்களின் சகோதரத்வம், சமத்துவம், கொண்ட நமது சமூகம் பிரிந்து வாழும் சமுகமல்ல, சிங்கள தமிழ் சமுகங்களுடன் ஒற்றுமைபூண்டு வாழும் நம்மைச் சில இந்திய சுயநலமிகள் நம்முள் பிளவையுண்டு பண்ணி பாக்கிஸ்த்தான் கொள்கையை யனுஷ்டித்து அவர்களுக்குப் பக்கபலமாக்கிக்கொள்ளப் பார்க்கிறார்கள். அவர்களின் வலைக்குட் சிக்கி நமது உரிமைகளை விட்டுக்கொடுப்பதா? அல்லது ஏனைய இலங்கைச் சமூகங்களுடன் சேர்ந்து உரிமைகளைப் பாதுகாப்பதா? சகோதரர்களே! நய வஞ்சகர்களின் வழிகளைப்பின்பற்றி உரிமையை இழக்காதீர்கள். தேசத்தை விலைப் பொருளென நினைத்து வியாபாரம் செய்துவிடாதீர்கள் நமது தாய்நாடு இலங்கை? நாட்டின் விடுதலைக்காகவும் நமது உரிமைகளைப் பாதுகாக்கவும் ஏனைய சமூகங்களுடன் ஒத்துழையுங்கள். நமது பிள்ளைகளுக்குத்தேசீயப்பற்று ஊட்டும் கல்வியை போதியுங்கள்.

நியாயத்தை நிலைநிறுத்த ஒரு கொடியின்கீழ் ஒன்று திரளுங்கள். தேர்தல் நெருங்கிவிட்டது. நம் சமூகத்திற்கு உள்ள ஸ்தானங்கள் குறைவானாலும் முஸ்லீம்களுக்கு முஸ்லீம் போட்டியிடாமல் நேர்மையும் தேசப்பற்றும் கொண்ட பொதுநல ஊழியர்களைப் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யுங்கள்! சிநேகிதத்திற்கும் முகத்தாட்சண்யத்திற்கும் வாக்களித்து உரிமைகளை இழக்காதீர்கள். ஒருவருக்கு நல்லவராகலாம் பல பேர்களுக்கு கெட்டவர்களாகலாம். பணத்திற்கு ஆசைப்பட்டு தனது வாக்குரிமையை இழப்பவன் ஆண்மையற்றவன். ஆதலால் முஸ்லீம் சகோதர சகோதரிகளே! நேர்மையான பிரதிநிதிகளைத் தெரிவு செய்யுங்கள், நமது இலங்கைச் சமூகங்களுக்குட் பிளவை உண்டாக்க முனையாதீர்கள். இலங்கையிற் பிறந்த யாபேரும் சகோதரர்கள்போல வாழ்வதே முறை. ஈழ நாட்டில் ஒற்றுமையாக வாழ்ந்தால் எளிதிற் சுதந்திரம் பெறலாம். சிங்களர், சோனகர், தமிழர் என்ற வித்தியாசமின்றிச் சகோதரர்கள் என மதித்து ஒற்றுமையாக வாழ முயற்சிப்போமாக.

A. C. M. ஹனிவா

திரிகோணமலை
22-6-46

## ஆசிரியர் கிளர்ச்சி

புதிய வேதனத் திட்டம் அங்கீகரிப்புக்கொண்டு வரப்பட்ட நாள் தொடக்கம் இலங்கை முழுவதிலுமுள்ள பாடசாலை ஆசிரியர்களுக்குள் திருப்தியீனமும் கிளர்ச்சியும் உண்டாகியிருக்கின்றன. இத்தீவின்எப் பகுதியைப் பார்த்தாலும் ஆசிரியரோ பொது சனங்களோ ஒரே கிளர்ச்சிக் கூட்டம் நடத்துகிறார்கள். அக்கூட்டங்களில் ஆசிரியருக்குக் குறிக்கப்பட்ட வேதனம் நீதியற்றதென்று கண்டிக்கப்பட்டு வருகின்றது.

ஆசிரிய வேலை உன்னதமானதுதான். ஆனால் ஆசிரியருக்கோ "உண்பதற்குக் காற்றும் உடுப்பதற்கு முகில்களும்" போதுமானவை என்று நினைக்கலாமா? 35,000 க்கு மேற்பட்ட ஆசிரியர்களின் நன்மையைக் கவனிப்பதற்கு நிலைபரமான ஸ்தாபனம்ஒன்றுமில்லை. 1919-ம் ஆண்டில் இங்கிலாந்தில் இந்த நோக்கத்திற்காக ஒரு காரிய சங்கம் அமைக்கப்பட்டது. அதன் மூலமாய் (Burnham)பேண்காம் வேதனத்திட்டம் ஒன்று 1921-ம் ஆண்டு வெளியிடப்பட்டது. பேண்காம் பிரபு இறக்கும்வரைக்கும் (அதாவது 1933-ம் ஆண்டுவரைக்கும்) அவரது அரிய தலைமையில் இச் சங்கம் நடைபெற்று வந்தது. அதன்பின் ஒன்ஸ்லோப் பிரபு தலைவராயிருந்தார். தற்போது சோல்பரிப் பிரபு தலைவராயிருக்கிறார். ஆகையால் இங்கிலாந்திலிருக்கும் சங்கத்தைப்போல் ஒரு காரிய சங்கம் இலங்கையிலும் அமைக்க வேண்டும். அது கல்வி மந்திரியின் அங்கீகாரம் பெற்றதாய் இருக்க வேண்டும். இங்கிலாந்து—உவேல்ஸ் கல்வி ஒழுங்கு சம்பந்தமாய் 1944-ம் ஆண்டு ஆவணி மாதம் 3-ம் திகதி நிறைவேறிய கல்வித் திட்டம் 89-ம் பிரிவில் கூறப்பட்டதை இத் தருணத்தில் கூறுவது நலமென நினைக்கிறேன்:

"ஆசிரியரின் வேதனத்தைத் திட்டப்படுத்துவதற்காய் கல்வி மந்திரி காரிய சங்கம் அல்லது சங்கங்களை நியமிக்கவேண்டும். அது அவ்வவ்விடங்களிலுள்ள கல்வி அதிகார சங்கங்களினதும் ஆசிரியர் சங்கங்களினதும் பிரதிநிதிகளைக் கொண்டதாய் இருக்கவேண்டும். இக்காரிய சங்கம் கல்வி மந்திரியின் வேண்டுகோளின்படி அல்லது தகுந்தது என்று நினைக்கும் நேரத்தில் ஆசிரியர் வேதனத் திட்டமுறையொன்று தயாரித்து மந்திரிக்குச் சமர்ப்பிக்க வேண்டும். இந்தத் திட்டம் கல்விமந்திரியின் அங்கீகாரம் பெற்றபின் நடைமுறைக்கு வரவேண்டும். அதன்பின் அந்தந்த இடங்களிற் கல்வி அதிகார சங்கங்கள் குறித்த திட்டத்தின்படி ஆசிரியர்களுக்கு வேதனம் வழங்கச் செய்வதற்கு ஏற்ற பிரமாணத்தை மந்திரி கட்டளையிட வேண்டும்."

பி. சவிரிமுத்து
யாழ்ப்பாணம், 24-6-46

## ஆசிரியர் தினம்

22-4-46-ல் கூடிய முக்கூட்டு (அகில இலங்கை ஆங்கில ஆசிரியர்களின் பிரதிநிதிகள் ஐந்து பேர், அகில இலங்கைச் சிங்கள ஆசிரியர்களின் பிரதிநிதிகள் ஐந்துபேர், அகில இலங்கைத் தமிழாசிரியர்களின் பிரதிநிதிகள் ஐந்துபேர்களடங்கிய) நிர்வாகசபையில் 10-7-46-ந் திகதி புதன்கிழமை ஆசிரியர் தினமாகக் கொண்டாடப்படவேண்டுமென்று ஏகமனதாகத் தீர்மானிக்கப்பெற்றது. பகிரங்கக் கூட்டம், அன்று மாலை நாலு மணிக்குப்பின் ஒவ்வொரு அரசாங்கசபைப்பிரதிநிதியினுடைய வட்டாரத்திலும் அவ்வப்பகுதிக்குரிய ஆசிரிய சங்கங்களால், அவ்வப்பகுதிகளில் ஒழுங்கு செய்யப் பெறும். ஒவ்வொரு வட்டாரத்திலுமுள்ள சுயபாஷா ஆசிரியர் சங்கமும், ஆங்கில ஆசிரியர் சங்கமும் சேர்ந்து பகிரங்கக் கூட்டத்தை நடத்துவதே நல்லது. ஆசிரியர்களாகப் பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு ஆணும் ஒவ்வொரு பெண்ணும் அவ்வவ் வட்டாரத்துக்குரிய கூட்டத்திற்கும் சமூகமளிக்குமாறு தயவாக வேண்டுகின்றேன். இங்ஙனம்

K. கந்தையா
செயலாளர்

அகிலஇலங்கைத் தமிழாசிரியர்சங்கம்
வட்டுக்கோட்டை
24 6-46

## "நொண்டி நாடகம்"

தொடுவாயில் 'யோகை' என்றொரு கிழவனாரின் வீட்டில் அவருடைய குடும்பச் சொத்தாகப் பேணிவந்த சில பழைய புத்தகங்களுட் கண்டெடுத்த கிழிந்த கொப்பியில் இது இருந்தது. சொற்சிதைவும் காணப்பட்டது. கிழவர் பாடியும் காட்டினார். அவர் பாட்டிற்கும் கொப்பிக்குமிடையில் பாடபேதம் காணப்பட்டது. அவை இரண்டனுள் சிறந்ததை எடுத்தேன். சிறிது அமங்கலமான சொற்களுக்கு மறு பாடத்துச் சொற்களை இட்டுள்ளேன்.

மேலும், இப்படிப் பாட்டுக்கள் யாழ்ப்பாணத்துக் கரையூரிலும் வழங்குகின்றன. ஆனால் தொடர்பாக எடுக்கமுடியவில்லை. இற்றைக்கு 40 ஆண்டுகளுக்கு முன் தமிழ் வழங்கிய நாடு இன்று வழங்காதிருப்பினும் இப்பாட்டு அங்கே கிடைத்ததுதான் எனக்கு வியப்பளித்தது. கொப்பியில் ஆசிரியர் பெயர் இல்லை. கன்ன பரம்பரையாகவும் பெரு வழக்கினும் வரும் பாக்கள் பாடபேதம் கொண்டு இயலுவது வழக்கமே. பள்ளுப் பிரபந்தங்களும் இதற்குச் சான்று.

[illegible] — கோவான் — கோபாலன் — ஆழியர்கோன் என்பன ஆராயப்படின் நன்றாகும். இங்கே இடம் இல்லை. ஈற்றில், பொன்னுக்கோன் மன்னன் சிற்றரசனாக நடித்து நீதிவழங்கும் நாடக பாத்திரம் என்பதை மறவற்க.

கண்டி
27-6-46 அ. வி. ம.

## ஆசிரியர் கடமை

### புது முறைகளின் அவசியம்

கும்பளைத் தமிழாசிரிய சங்கக் கூட்டமொன்று, 22-6-46 சனிக்கிழமை, கம்பளை அரசினர் தமிழ்ப்பாடசாலை மண்டபத்தில் வட்டார வித்தியாதரிசி ஸ்ரீ வே. சிவகுரு தலைமையில் நடைபெற்றது. தலைவர் கூறியதாவது:

கல்வி பயிற்றும் முறைகளுட் பழைய முறைகள்தான் சிறந்தன என்று சொல்லிக்கொண்டு அதிற் பரமதிருப்தியடைந்து வாளாவிருத்தல் ஆசிரியர்களுக்கு அழகன்று. ஆனாற் பழைய முறைகளெல்லாமே பொருத்தமற்றன என்று யான் கருதவில்லை. பழைய முறைகளுட் சிறந்தனவற்றை நாம் நிச்சயமாக வரவேற்கத்தான் வேண்டும். அன்றியும், விஷயங்கள் மாணவர் மனத்தில் இலகுவாகப் பதிவதற்கு எந்தெந்த முறைகளைக் கையாளலாமென்பதனை ஆசிரியர்கள் ஒன்றுகூடி ஆராய்ந்து சிறந்த முறைகளைக்கண்டுபிடித்தல்வேண்டும்.

அறிவிற் சிறந்த பெரியார் சிலர், எந்த முறைகளைப் பின்பற்றிப் படிப்பித்தால் மாணவர்கள் விஷயங்களை இலகுவிற் கிரகித்துக்கொள்வர் என்பதனைப்பற்றிய ஆராய்ச்சியிலேயே தங்கள் சீவியம் முழுவதையும் செலவு செய்கின்றனரென்றால் மாணவர்களுக்குப் படிப்பிக்கும்போது முக்கியமாகப் பாலருக்குப் படிப்பிக்கும்போது ஆசிரியர்கள் எவ்வளவு கவனமாக இருத்தல் வேண்டுமென்பது நன்கு புலனாகின்றது.

பாலர் மேற்பிரிவில் இருபதுக்கு பாகுபாடு படிப்பித்தல் மிகமிக இலகுவான செயலாக எமக்குத் தோன்றலாம். ஆனால் அதில் பெரிய பொறுப்பு இருக்கின்றது. சாதாரண விவேகமுள்ள ஒரு மாணவனை ஓர் ஆசிரியர் ஓரளவு சமர்த்தனாக்க ஆக்கலாம்; எனவே, ஆசிரியர்கள் மாணவர்களைப் பயிற்றும் விஷயத்தில் மிகக் கவனமாக இருத்தல் இன்றியமையாதது.

இதன்பின் Dr. M. இராஜசிங்கம்பாடசாலைச் சுகாதாரம், என்னும் விஷயத்தைப் பற்றிச் சொற்பொழிவாற்றினார் —கடிதம்

> இப் பத்திரிகையில் வெளியாகும் ஹாஸ்யக் கட்டுரைகள், கதைகளில் வரும் பெயர்கள் கற்பனைப் பெயர்களே. கட்டுரையாளர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்.

## தமிழர் வென்ற சுதந்திரம்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

யிருந்தால் மன்னர்க்கு மன்னுதல் 'படை (ஆடம்பரம்) யுடைமை என்று சொல்லியிருக்கலாமே'

அவர் கூறும் போர் காந்திஜியின் அறப்போர்; அஹிம்ஸைப் போர். கட்டாயமேற்பட்டாலன்றி, வஞ்சந்திர்க்கச் செய்வதல்ல, அப்போதுதானே பகைவனுக்குத் துன்பஞ் செய்யாமல் அவனிடம் இரக்கங் கொண்டும், அவன் பிழையையுணருமளவு மட்டும் போர் செய்ய முடியும். அதாவது பகைவன் மனம் உருகும் படித்தான் துன்பத்தை யேற்பது!

'பேராண்மை யென்ப தறுகண்ஒன் றுற்றக்கால்; ஊராண்மை மற்றதன் எஃகு' என்பவர் பகைவருடைய தீமையை யழிக்கவன்றி, அவரைச் சிறிதும் துன்புறுத்தத் தம்போர் நிகழல் ஆகாதென்ற இன்றைய சத்யாக்கிரகப் போரின் உண்மையையே கொண்டு எழுதுவதாக ஆராய்கிறோம். இத்தகைய அறப்போர் முறையில் பயின்ற தனி மனிதர் பெருகும்போதே நம் நாடு உரிமையடையும். அத்தகை போரை வளர்ப்பதே காந்திஜி, வள்ளுவர் ஆகியவரின் குறிக்கோளாகும், முற்கூறிய சமய வாழ்வும், ஞானி வாழ்வும் உள்ளத்தை அச்சம், ஆசை, மடமையற்ற, வீரம், உரிமை, அறிவு இவை உடையதாக ஆக்கவே காணப்பட்டன. பின்னர் பிழை பட்டிருக்கலாம். தாபதர், அறிவர் எனத் தொல்காப்பியம் கூறுவதெல்தாம் இவரையே. இத்தகைய உண்மையான வீரர் மல்க நாடு உரிமையைத் தானே பெறும். பின் எங்கும் இன்பத்தோடு இணைந்த அமைதியும் ஒற்றுமையுடன்கூடிய மனித வாழ்வும் நிலவும்.

## 254-ம் இலக்கப் புடவைக் கட்டுப்பாட்டு அறிவித்தல்

241-ம் இலக்கப் புடவைக் கட்டுப்பாட்டறிவித்தலின் தொடர்பாகப் பெலியட்டையிலுள்ள G. பீ. எச். வின்சென் சில்வா என்னும் மொத்த வியாபாரப் பங்கீடுகாரருடைய வியாபாரநாள் முன் வெளியிட்டவாறு சனிக்கிழமை மாலை 2 மணிக்கன்று வெள்ளிக்கிழமை மாலை 2 மணிக்காம். 241-ம் இலக்கப் புடவைக் கட்டுப்பாட்டறிவித்தல் தன்வு செய்யப்பட்டதாகக் கொள்ளவும்.

ஈ. ரெுட்றிக்கோ
புடவைக்கட்டுப்பாட்டதிகாரி
கொழும்பு, 24-6-1946
[2811]


# யாழ்ப்பாணம் ஐக்கிய லாப நிதி

**1918-ம் ஆ. ஸ்தாபிதமானது.**

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா 34,36700. 100ரூபா விகிதமான 8000 பங்குகள்

**பங்குப்பணங் கட்டுமுறை:**
மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாதந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

**தினசரிப் பற்று வரவு:**
எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்:**
க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னுங் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1விகிதம், 2 விகிதம், 4 விகிதம், 6விகிதமாகக் கொடுக்கப்படும்.

**உண்டியல்கள்:**
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும்.
இந்தியா நோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

**கடன்:**
நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.
வேண்டிய விபரங்களை என்மூலம் அறிந்து கொள்ளலாம்.

S. கனகசபை
சிருப்பர்

(2775)



# இலங்கை அரசாங்க ஈட்டு வங்கி
# THE CEYLON STATE MORTGAGE BANK

இந்த அரசாங்க ஈட்டு வங்கியில் கடன்கள், பத்திரங்கள் மூலம் அசைவற்ற காணிகளின் பிணையில் கீழ்க்காணும் விஷயங்களுக்குச் செலவுசெய்யும் பொருட்டுக் கொடுக்கப்படும்.

(1) கமத்தொழில் விஷயங்களுக்கும்,
(2) கட்டிடங்கள் கட்டுவதற்கும், விலைக்கு வாங்குவதற்கும், குத்தகைக்கு எடுப்பதற்கும்.
(3) மேற்காட்டிய விஷயங்களின் பொருட்டுக் கடன் வாங்கி யிருந்தால் அக்கடனைத் தீர்ப்பதற்கும்.
(4) ஏதாவது கட்டடங்கள் அல்லது காணியின் பேரிலுள்ள ஈடு மீளுவதற்கும்.

வட்டி விபரம் பின்வருமாறு:— கடன் எடுக்குந் தொகை 5,000 ரூபாவுக்குக் குறைந்திருந்தால் 6 வீத வட்டியும்; 5,000 ரூபாவுக்குக் கூடியும் 10,000 ரூபாவுக்குக் குறைந்துமிருந்தால் 5½ வீத வட்டியும்; 10,000 ரூபாவுக்குக் கூடியும் 50,000 ரூபாவுக்குக் குறைந்துமிருந்தால் 5 வீத வட்டியும்; 50,000 ரூபாவுக்குக் குறையாதிருந்தால் 4½ வீத வட்டியுமாம்.

கடன்கொடுக்கும் குறைந்த தொகை 2000 ரூபாவாகும். விபரங்கட்கு 'மனேச்சர்', இலங்கை அரசாங்க ஈட்டு வங்கி, இல. 127, கேமேல் பிளேஸ்', கொழும்பு, என்ற விலாசத்திற்கு எழுதி அறியவும்.

(2776)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறு கதை

# பாசம்

S. N. சொக்கநாதபிள்ளை

அந்தகாரம் சூழ்ந்த இரவு. பெரும் புயலுடன் கூடிய மழைக்குப்பின் இருக்கும் ஓய்வு. மரங்களிலிருந்தும் வீட்டு ஜல தாரைகளிலிருந்தும் கொட்டிக் கொண்டிருக்கும் ஜலத் துளிகளின் சப்தம். இடையிடையே நீரில்வதியும் ஜந்துக்களின் குதூகலமான சம்பாஷணை. இவற்றைத் தவிர வேறொன்றையும் கேட்க முடியவில்லை. ஜப்பானுக்குப் பயந்து இருளில் மண்டிக் கிடக்கும் கொழும்பு—சுடலை போன்ற பயங்கர அமைதியுடனிருந்தது. மாடி வீடுமுதல் மரம்செடிவரைஎல்லாம் அக்கும்மிருட்டில் பயங்கரதோற்றமளித்தன. உறவினரொருவரைப் பார்த்துவிட்டு கொழும்பின் ஒரு மூலையிலிருந்து மற்றொரு மூலையை நோக்கி போய்க்கொண்டிருந்தேன். மழை காரணமாக இடைவழியில் ஒதுங்கியிருக்கவேண்டி நேரிட்டதால் அப் பயங்கர வேளையில் நடந்து கொண்டிருந்தேன். பழக்கமான பாதையானபடியால் கால்கள் தம் வழிச்சென்றன. மனம் எங்கோ எல்லாம் சஞ்சரித்துக் கொண்டிருந்தது. திடீரென்று ஒரு பயங்கர உறுமல். அதை அடுத்துக் கண்ணைப் பறிக்கும் ஓர் ஒளி தோற்றமளித்தது. ஏதோவொன்றின் மீது முட்டுகின்றேன் என்ற உணர்வு தோன்றிற்று. பின் என்ன நடந்ததோ தெரியவில்லை.

கண்களைச் சிறிது திறந்தேன் உடலெலாம் ஒரே நோவு. தலை மிகவும் கனதியாகவிருந்தது. ஒரு சொகுசான படுக்கையில் கிடக்கிறேன். பலர் என் பக்கத்தில் நிற்கின்றனர். மின்சார ஒளி பிரகாசித்தது. இந்த நிலையும் அதிக நேரம் நீடிக்கவில்லை. தலையைச் சுற்றுவதுபோல் தோன்றிற்று ஸ்மரணை இழந்துவிட்டேன். மறுபடியும் கண் விழித்தபோது சூரியன் பிரகாசமாகத் தெரிந்தது. எங்கோ ஓர் அறையில் ஓர் கட்டிலில் கையிலும், காலிலும், தலையிலும் கட்டுகளுடன் படுத்துக் கிடக்கிறேன் என்பது தெரியவந்தது. இடாம்பீகமற்று, ஆனால் வெகு அடக்கமாக, அழகாக அலங்கரிக்கப் பட்டிருந்தது அவ்வறை. நாலைந்து கதிரைகள், ஒரு மேசை, புஸ்தகங்களுள்ள ஒரு அலமாரி, நான் படுத்திருந்த கட்டில், இவைதான் அவ்வறையில் இருந்தன. சுடர் விட்டெரியும் தூண்டாமணியின் ஒளியில் மலர் மாலைகளால் அலங்கரிக்கப் பட்ட நடன நடராசனின் அழகிய படமொன்று காட்சியளித்தது. விளித்த கண்கள் எதிரிலிருந்த அப் படத்தையே பார்த்தன. இரு வாயல்களும் நாலைந்து யன்னல்களும் அவ்வறைக்கு இருந்தன. இரு வாயல்களுக்கிடையில் ஜன்னலில்லாத சுவர்ப்புறமாக என் கட்டிலிருந்தது. கட்டிலில் படுத்திருந்தபடி பார்த்தால் உதய சூரியன் தோற்றம் ஆனந்தத்தை ஊட்டும். இவையெல்லாம் சில நிமிஷங்களில் தோற்றியவை. யான் ஒரு புது இடத்தில் எழும்பமுடியாத நிலையிலிருக்கிறேன் என்று புலனாயிற்று. என்ன சம்பவித்தது என்றும் விளங்கவில்லை. உடலெலாம் நோவு. தாங்கொணா வேதனை, பேச முடியாதவாறு நாவறட்சி. யாரையாவது கூப்பிடலாமென்றால் என்னால் இயலவுமில்லை. யாரைக் கூப்பிடுவதென்றும் தோன்றவில்லை. இந்நிலையில் அறையுள் பலர் பிரவேசித்தனர். எங்கோ பார்த்தவர்கள் போன்ற ஒரு ப்ரேமையன்றி யாரென்று புரியவில்லை. ஒரு முறை கண்ணை இமைத்தேன். அவர்கள் மனிதர்கள், எனக்குதவுவதற்கே நிற்கிறார்கள் என்று தீர்மானம் செய்தேன். முன்னணியில் டொக்டர் ஒருவர். அவருக்குப்பின் 50 வயது வரை மதிக்கத்தக்க ஒரு ஆண்மகன். அவர் பக்கலில் 40 வயதுவரையுடைய ஓர் அம்மணி. அவர்களைச் சுற்றி அவர்கள் பிள்ளைகள்போலும் 5, 6 பேர் நின்றனர். எல்லோர் முகத்திலும் கவலையும் ஆவலும் குடிகொண்டிருந்தன. டொக்டர் பரிசோதிப்பதற்காக அவர்களெல்லாம் வெளியே சென்றனர். வெகு சீக்கிரமாக சோதனைகளையெல்லாம் முடித்துக் கொண்டு திருப்தியான முகபாவத்துடன் வெளியே சென்றார் டொக்டர். போகும்போது அவர்களிடம் ஏதோ சொல்லிவிட்டுப் போனார். அவர்களெல்லோரும் என்பக்கலில் வந்தனர். என்னால் பேச இயலவில்லை. சிரமத்துடன் நீர் வேண்டுமென்று சைகை காட்டினேன். அவ்வம்மையார் சூடான ஏதோவொரு நீராகாரத்தை என் வாயில் விட்டார். ஆயாசமெல்லாம் எவ்வளவோ தீர்ந்து சிறிது பேசக்கூடியதாகவிருந்தது.

இந் நிலையில்தான் நாலுநாட்களின் முன் மசங்காமரச் சந்தியில் ஏதோவொன்றின் மீது சறுக்கி தூர் அர்வ்ஷ்டவசமாக அவ்விடத்தில் வந்த அவர்கள் மோட்டார் மீது மோதியதால் ஏற்பட்ட விபத்து என்றும், அவர்களால் காப்பாற்றப்பட்டு அவர்கள் வீட்டிலிருக்கிறேன் என்றும், அன்று காலை வரையில் ஸ்மரணையற்று ஏதேதோவெல்லாம் பிதற்றிக் கொண்டிருந்தேனென்றும், அதால் அவர்கள் மிகவும் பயந்திருந்ததாகவும், என் சட்டப்பையிலிருந்த விலாசத்தால் நான் இருக்குமிடத்தை அறிந்து என்னுடனிருப்பவர்களுக்கும் அறிவித்து அவர்கள் தினமும் வந்துபார்த்துப் போவதாகவும், என்னிலை நான் வேலைசெய்யும் காரியாலயத்துக்கும் அறிவிக்கப்பட்டு 1 மாத லீவு டொக்டர் சிபார்சின்பேரில் கிடைத்திருப்ப தாகவும் அறிந்தேன்.

ஈஸ்வரன் ஒருவரையும் கைவிடமாட்டார். இன்னல் காட்டி இன்பமூட்டுவான். ஆபத்து வேளையில் அபயமளிப்பான்.

கை கால்களில் ஏற்பட்ட காயங்களைவிடத் தலையில் ஏற்பட்ட காயம் மிகப்பயங்கர மானதென்றும், நான் உயிர் பிழைப்பேனோ என்றுகூட முதலிரண்டு தினங்களில் எல்லோரும் சந்தேகமுற்றதாகவும், டொக்டர் நம்பிக்கையிழக்காது தம் சக்தி முழுவதையும் பிரயோகித்து என் உயிருக்காகப் போராடினாரென்றும், அப்போது கணமும் என்னைப் பிரியாதிருந்து அவ்வம்மையாரும், அவர் குடும்பத்தாரும் சிகிச்சை செய்ததாக அறிய என்மனம் இன்னதென்றறியா உவகையால் நிரம்பியது. இனி என் உயிருக்கு ஆபத்தில்லை. இரண்டு வாரம்வரை படுக்கையை விட்டு எழுந்து நடமாட முடியாது — நடமாடக் கூடாது. மிகவும் கவனமாகப் பாதுகாக்க வேண்டும் என்பது வைத்தியர் கட்டளை. அதை அவ்வம்மையாரும் மற்றையோரும் சிரமேற் கொண்டு நிறைவேற்றினர்.

கொழும்பிற் பிரபல்யமடைந்திருக்கும் அந்த டொக்டர் ஏழை பணக்காரரென்ற வித்தியாசமின்றி எல்லாரையும் தம் சகோதரர்கள் போன்று எண்ணி அன்பாய் நடத்துவதால், அவர் கொடுக்கும் மருந்தைவிட அவரின் பணிவுடன் கூடிய அன்பான நடத்தையொன்றே வியாதியஸ்தர்களை சீக்கிரம் குணமடையச் செய்யும் மருந்தாக இருந்தது. வைத்தியரின் தன்னலங்கருதா நடத்தை, தாய்மை அன்புடன் கூடிய அவ்வம்மையின் அரும் பணி எல்லாம் சேர்ந்து என்னை எல்லோரும் எதிர்பார்த்ததைவிட அதி சீக்கிரத்திலேயே சௌக்கியமடையச் செய்து விட்டது. இரண்டு வாரத்துள் நடைபயிலும் நிலமையைக்கூட அடைந்தேன். புனர்ஜன்மம் எடுத்தேன் என்றுதான் சொல்லவேண்டும்.

அவ்வம்மையார் பெயர் வள்ளிநாயகி. அவர் புருஷன் பெயர் நமசிவாயபிள்ளை. அவர் கொழும்பில் பிரசித்திபெற்ற ஒரு ஆங்கில கலாசாலையின் பிரதமாசிரியர். அவருக்கு மூன்று பெண்களும், மூன்று ஆண்களும் பிள்ளைகள். மூத்தபெண் வீட்டில் தாயாருடன். மற்றப்பெண்கள் பாடசாலையொன்றில் குருஸ்தானத்தில். மற்றவர்கள் கல்வி பயில்கிறார்கள். அவர்களெல்லாம் காலை 8 மணிக்கே பாடசாலைக்குப் புறப்பட்டு விட்டார்களானால் பின் சாயந்தரம் 5 மணிவரையில் திரும்புவார்கள். அவர்கள் வரும்வரையில் வீடு சத்தஞ் சந்தடியின்றி அமைதியாக இருக்கும். எல்லோரும் வந்துவிட்டால் வீடு கலகலத்துக்கொண்டிருக்கும். வீட்டில் அவ்வம்மையாரும் அவர் மூத்த பெண்ணும், வேலைக்காரப்பையனொருவனும்தா னிருப்பார்கள். பள்ளிக்கூடம் செல்வோர்க்குச் சாப்பாடு ஆயத்தஞ் செய்வதிலும், அவர்களுக்கு நீராட்டி உடுத்தி அனுப்புவதிலும், பின் மத்தியானம் சாப்பாடு தயார் செய்து அவர்களுக்கு அனுப்புவதிலும் அவர்கள் திரும்பிவரு முன்பே சிற்றுண்டியுடன் அவர்களை எதிர்பார்த்திருந்து அவர்கள் களைப்பை ஆற்றி உற்சாகமூட்டிய பின் இரவு சாப்பாடு தயார் செய்வதும், எல்லோர்க்கும் அளித்து மறுதினம் காலையில் நடைபெற வேண்டியவற்றுக்கு ஆயத்தம் செய்து உறங்குவதும் தான் அவர் நித்திய கடமைகள். அவர் நித்திரைக்கு எப்போது செல்கிறாரோ எப்பொழுது விழித்தெழுகிறாரோ என்று மற்றவர்களுக்குத் தெரிவதில்லை. கண் விழித்தால் பின் தூங்கும் வரையில் வேலை செய்கிறாரா என்றால் அதுவுமில்லை. பகலில் போதிய ஓய்வு பெறுகிறார். அந்நேரத்தைக்கூட வீணுக்காது தமிழ் அன்னையை, தமிழ்மொழியிலுள்ள உயர்ந்த காவியங்கள், புராணங்கள், இலக்கியங்கள் எல்லாவற்றையும் கற்கிறார். அவற்றைக் கற்பதுடனின்றித் தன் பிள்ளைகளுக்கும் முன் மாதிரியாயிருக்கிறார். புதினப் பத்திரிகைகளும் வாசிக்கிறார். வருவோர்களை அகமும் முகமும் மலர்ந்து வரவேற்றுப உபசரிக்கிறார். பெருமையோ, கர்வமோ சற்றுமின்றி, இடாம்பீகமின்றித் தன் குடும்பத்தை நடத்துகிறார். தன் கணவன்—தன் பிள்ளைகள் தவிர வேறோருவரும் இல்லையென்று எண்ணுவதில்லை. தனக்கென்று எதையும் விரும்பாது, ஏழையாயினும் அன்புடன் அவருக்கு உதவுகிறார். எந்நேரமும் மலர்ந்திருக்கும் முகத்திற் களங்கமென்பதைக் காணவே முடியாது. அவர் பிள்ளைகளும் அவர் குணங்கள் நிறையப்பெற்றிருந்தனர். ஆங்கிலக் கல்வி அவர்களிடை சிறிது தூரம் அந்நிய (அ)நாகரீகத்தைத் தலைகாட்டினும், தாய்மை என்னும் அன்பில் அது தன் கோர சொரூபத்தைக் காட்ட முடியவில்லை. இதிகாச. காவியங்களில் வரும் பழம் தமிழ்நாட்டுத் தெய்வீக பெண்களைப் போன்று-அவரைக் கண்டேன்.

நானிருந்த அறை சமயலறையின் சமீபத்திலிருந்தமையின் எப்போதும் அம்மையாரதும் அவர் மூத்த பெண்ணினதும் பார்வையிலேயே இருந்தேன். அதனால் எனக்கு ஏதாவது தேவையானபோது – என் விருப்பமறிந் தளித்து ஒருவித குறைவுமின்றிச் செய்துவிட்டனர். சிற்சில சமயம் என்னால் அவர்கள் அன்புப் பணியைத் தாங்கமுடியாது திணறவேண்டியும் ஏற்படும். அப்போதெல்லாம் விதியின் விளையாடலையும், சிலகாலங்களின் முன் என்னை விட்டுப் பிரிந்த, என்னை ஈன்ற அன்னையையும் நினைவு கூரும் படியாய் விடுகிறது. கண்ணில் தூசி படியாது இமை காப்பது போல் என்னைக் காத்த அன்னை என்னை விட்டுப் பிரிந்ததும் எனக்கு உலகமே இருண்டுவிட்டது போலிருந்தது. தந்தையாரதும், சகோதரங்களினதும் அன்பு எனக்கு அக்குறையை நிவிர்த்தி செய்யவில்லை. போதாதற்கு அவர்களன்புகூட அடிக்கடி கிட்டாதவாறு வயிற்றை நிரப்பவென்றே நினைக்கிறேன் கொழும்பு வரவேண்டியதாயிற்று. ஆபீஸில் இயந்திரம் போன்ற ஒரே வேலை. சாயந்தரம் வீடுதிரும்பினால் என்னைப் போன்று—யந்திரம்போல் வேலை செய்துவிட்டுத் திரும்பியிருக்கும், நண்பர்கள், எல்லோரும் ஒரேவிதமான மனவருத்தத்துடன் ஆறுதலின்றி ஏக்கமாக நித்திரை கொள்வோம். அதுவுமொரு நித்திரையா? விடிந்தால் பழைய பல்லவிதான். எப்போதாவது பிறந்த ஊருக்கு வந்தால் ஆனந்தம்—ஆறுதலெல்லாம் கிட்டும். இதுவும் நாலைந்து தினங்களுக்குத்தான். திரும்பவேண்டுமே என்பதை எண்ண உற்சாகமெல்லாம் போகத்தொடங்கும். புறப்பட்டு வண்டி ஏறினால் பழைய ஏக்கமும் கவலையும் தான். அந்நிய ஊர்களில் அறிந்தோர் எத்தனை பேரிருப்பினும் தன் ஊரவன், உறவினன், உடன் பிறந்தான் ஒருவனைக் கண்டால் காணாத காட்சியொன்றைக் கண்டதுபோல் உள்ளம் மகிழும். இவ்வித நிலையில் இருந்துவந்த எனக்கு எதிர்பாராத நிலையில் ஏற்பட்ட விபத்து பெரும் மாறுதல்களையெல்லாம் கொடுத்து என்னை ஒரு புது மனுஷனாக்கியது. (தொடரும்)

## அடைவுநகை விற்பனவு விளம்பரம்

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்று அடைவு பிடிக்கும் தொண்டமானாறு **ஆறுமுகம் சிவசம்பு** அவர்களின் கடையில் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி மேற்படி சட்டத்தின் 12 ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்.

| இல. | தேதி | ரூ. ச. | ஊர் | பெயர் | நகைவிபரம் |
|---|---|---|---|---|---|
| 1150 | 29-4-1944 | 120-00 | தொண்டமானாறு | முத்தன் வயிரி | 1 சோடி காப்பு, |
| 1176 | 21-9-1944 | 200-00 | வல்வெட்டித்துறை, | செல்லையா மாணிக்கம் | 1 அட்டியலும் பென்டனும். |

**விற்பனவு:** நிகழும் **விய வருஷம் ஆடிமாதம் 5ந் திகதி (21-7-46) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு,** எடுபட்ட நகைகள் நீங்கலாக மிகுதி, மேற்படியாரின் கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

பருத்தித்துறை,
20-6-46.

கா. முத்துக்குமாருஐயர்,
ஏலவிற்பனையாளர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


NATIONALIST TAMIL WEEKLY

# THE EELAKESARI

Largest Circulation in Ceylon, India & Malay States

Vol. 16 | Chunnakam, Sunday, June 30, 1946 | No. 47

## நற் சுகத்திற்கு




எங்களிடம் P. S. R. சந்தனுதித் தைல வகைகளும் விற்பனைக் கிருக்கின்றன.

[2741]

## யாழ்ப்பாணம் இலங்கா ஆயுர்வேத வைத்தியசாலை

### 1946-ம் ஆண்டு பரீக்ஷைப் பெறுபேறு

**4-ம் வருடம்**

| | | |
|---|---|---|
| செ. சுப்பிரமணியம் | 2-ம் | பிரிவு |
| பே. அருளப்பு | 2-ம் | ,, |
| சி. வைத்தியலிங்கம் | 2-ம் | ,, |

**3-ம் வருடம் பரீக்ஷை**

| | | |
|---|---|---|
| கா. சிவசுப்பிரமணியம் | 1-ம் | பிரிவு |
| ஆ. திருநாவுக்கரசு | 3-ம் | பிரிவு |
| சி. வைத்தியலிங்கம் | 3-ம் | பிரிவு |
| க. வேலாயுதபிள்ளை | 3-ம் | பிரிவு |

**2-ம் வருட பரீக்ஷை**

| | | |
|---|---|---|
| சி. குமாரசாமி | 2-ம் | பிரிவு |
| பொ. ஸ்ரீபதி சர்மா | 3-ம் | பிரிவு |
| க. தம்பாப்பிள்ளை | 3-ம் | பிரிவு |

**1-ம் வருடம்**

| | | |
|---|---|---|
| ஆ. நாகராச சர்மா | 2-ம் | பிரிவு |
| சி. அம்பலவாணர் | 3-ம் | ,, |
| ச. பரமானந்தன் | 3-ம் | ,, |
| ச. இராசையா | 3-ம் | ,, |
| பொ. ஸ்ரீபதி சர்மா | 3-ம் | ,, |



## மேலதிகமாக வண்ணான் கிழித்தாரா!

### — ஆடைகள் மிகவும் ஒறுப்பனவாயிருக்கும்போது

இந்நாட்களிலிருக்கும் கொள்ளை விலையில் வண்ணான் உங்கள் ஆடைகளைக் கந்தையாக்க விடமுடியாது. அவைகளைச் சுத்தப்படுத்துவதற்குக் கிழிந்துபோகக் கூடாத முறையைக் கண்டுபிடிக்கவேண்டும். 'சன்லைட் சோப்பை உபயோகித்து மிச்சம்பிடிக்கும் முறை'யை ஆரம்பிப்பதற்கு இதுதான் சமயம். இவ்விதம் மிருதுவான முறையில் ஆடைகளைத் தோய்ப்பது வண்ணானின் முறையிலும் எவ்வளவோ மேலானது. இது மிகவுஞ் சுலபமானது; ஆடைகளை மிகவுஞ் சுத்தமாகத் தோய்த்துவிடுகிறது; ஒரு நூலிழைதானும் கெட்டுப்போகமாட்டாது. உங்களுடைய வேலைக்காரனுக்குக் கீழே குறிப்பிட்டிருக்கும் சாதாரண விவரங்களை விளக்கிக் கூறவும்.

**உங்கள் வேலைக்காரனுக்குச் சன்லைட் சோப்பை உபயோகித்துப் பணத்தை மிச்சப்படுத்தும் முறையைக் கற்பியுங்கள்.**



1. ஆடைகளைத் தண்ணீரில் நன்றாக ஊறவையுங்கள்.
2. ஆடைகள்மீது — அழுக்குப் படிந்த இடத்தில் மேலதிகமாக—சன்லைட்டை நன்றாகத் தேய்க்கவும்.
3. சோப் ஆடைகளுள் செறியும்படி மிருதுவாகத் தப்புதல் வேண்டும். அவைகளை அடிக்கவேண்டாம். சன்லைட்டின் 'சுய ஆற்றலுள்ள' நுரை அழுக்கை இழக்கி எடுத்துவிடுகிறது
4. நன்றாக அலசிக் கழுவவும். அழுக்கு சன்லைட் நுரையிலேயே இருக்கிறபடியால் அலசிக் கழுவிவிடவும். நன்றாக அழுக்கடைந்த ஆடைக்குத் திரும்பவும் சோப் போடவேண்டும்.




## சன்லைட் சோப்

**ஆடைகளைப் பாதுகாக்கின்றது**

S. 72-169 LEVER BROTHERS (CEYLON) LIMITED

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. 2281

உரும்பராய்

1. நன்னித்தம்பி கந்தர் தம்பியையா
2. பெண் சின்னத்தங்கச்சி

வழக்காளிகள்

கோப்பாய் வடக்கு கிருட்டிணர் கந்தையா (காலஞ்சென்ற கிருட்டிணர் செல்லப்பாவினதும், பெண் ஆச்சிப்பிள்ளையினதும் ஆஸ்திக்குப் பிரதிகாரியஸ்தராகவும்) எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 2281-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் 4 துண்டுக் காணிகள், 1946-ம் ஆண்டு ஆடி (ஜூலை) மாதம் 20-ந் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

**தீர்வைத் தொகை:—** முதல் வட்டி ரூபா 708—53-ம், இதில் ரூபா 400-க்கு 27-9-45 தொடக்கம் 20-11-45 வரைக்கும் 100-க்கு 12 வீத வட்டியும், பின்திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும்வரைக்கும் 100-க்கு 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபா 164—40 சதமும்.

### காணிகளின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப்பகுதி கோப்பாய்க் கோவிற்பற்று கோப்பாய் வடக்கிறை "கலம்பிறை" நிலைப்பர. ஏழும், (7) வீடும், செய்பயிர் வான்பயிர்களும். எல்லை: கிழக்கு, சீனியர் கந்தையாவுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். வடக்கு, சின்னத்தம்பி கந்தையாவின் ஆதனம். மேற்கு, வயித்திலிங்கம் கைம்பெண் முத்துப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். தெற்கு, வயிரமுத்து பெண் சின்னச்சிக்கும், சின்னத்தம்பி பெண் செல்லத்திற்குமுரிய ஆதனம். இதடங்கலும், இன்னும் கிழக்கேயிருக்கும் கிணற்றில் இதற்குரியபங்கும் வழிவாய்க்காலுரித்தும்.

2. மேற்படி கோப்பாய்வடக்கிறை "வமிக்கம்புலம்" நிலைப்பர. இருபத்துநாலும் (24) பனைகளும். எல்லை: கிழக்கு, சின்னக்குட்டி கதிரவேலுவுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். வடக்கு, கனகர் கயிலாயபிள்ளையின் ஆதனம். மேற்கு, வயிரமுத்து கதிரவேலுவின் ஆதனம். தெற்கு, கதிரவேலு இளையதம்பிக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். இவ்வெல்லைகளுக்குட்பட்டவைகளிற் சொரியலாய் அரைவாசியும் அதற்குரியவைகளும்.

3. மேற்படி கோப்பாய்வடக்கிறை "ஆவரம்பிட்டி" நிலைப்பரப்பும் நெற்பரப்பும் ஒன்பதும் (9). எல்லை: வடக்கு, கந்தர் கார்த்திகேசுவுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். கிழக்கு, சோமசுந்தரக்குருக்கள் பெண் காமாட்சியம்மாவின் ஆதனம். மேற்கு, ஆறுமுகம் சின்னத்தம்பியின் ஆதனம். தெற்கு, சின்னத்தம்பி சதாசிவத்தின் ஆதனம். இவ்வெல்லைகளுக்கு உட்பட்டவைகளிற் சொரியலாய்ப் பன்னிரண்டில் ஒருபங்கும், மேற்கெல்லையிலிருக்கும் கிணற்றிற் பங்கும்.

4. மேற்படி கோப்பாய் வடக்கிறை "சரந்தோட்டம்" நிலைப்பரப்பு பன்னிரண்டும் (12) பனைகளும். எல்லை: கிழக்கு, வல்லிபுரம் பெண் சின்னக்குட்டியின் ஆதனம். வடக்கு, முருகன் பெண் கட்டைச்சியின் ஆதனம். மேற்கு, வயிரமுத்து பெண் சின்னப்பிள்ளைக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். தெற்கு, இளையதம்பி பெண் கதிராசியின் ஆதனம். இவ்வெல்லைகளுக் குட்பட்டவைகளிற் சொரியலாய் நாலிலொரு பங்கும் அதற்குரியவைகளும்.

Sinnathamby Sangarappillai
சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner & Licensed Auctioneer

தெல்லிப்பழை,
15-6-46

## SAMUEL SONS & Co., Ltd.,

*HOSPITAL ROAD, JAFFNA*

T'GRAM: ECHIRON T'PHONE: 62

Head Office:- 371, OLD MOOR ST., COLOMBO
T'Phone: 2341 (2 lines)

**நியாயவிலை, நடுநிலை, நற்கீர்த்தி, திட நம்பிக்கை சிறப்பாக உள்ள நம் வர்த்தகசாலை:**

- கட்டிட வேலைக்குரிய இரும்புக் கம்பிகள், சலாகைகள், கேடர்கள், சீமெந்து, செங்கல், கறையான் எண்ணெய், பூட்டு, பிணைச்சல்
- கமத்தொழில், கைத்தொழில் ஆயுதங்கள்
- நீரிறைக்கும் இயந்திரங்கள், குழாய்கள், தாங்கிகள்
- பைசிக்கிள் வண்டிகள், ரியூப்ஸ், ரையேர்ஸ், கிறீஸ்
- சல்லடை வலைகள், ஒட்டுப் பலகைகள் (Ply-wood), கிருமிநாசனி, மைஎண்ணெய், மை வகைகள்

ஆதியன அடக்கியுள்ளது.

சகாயமான விலைக்கு எப்போதும் பெற்றுக்கொள்ளலாம்.

## சாமுவேல் சன்ஸ் & கம்பெனி லிமிரெட்

ஆஸ்பத்திரி றோட் : யாழ்ப்பாணம்

தந்தி: 'எச்அயர்ன்' 'போன்: 62

[2782]

## முல்லைத்தீவுச் சைவ மகாசபை

முல்லைத்தீவுப் பகுதியிலே சைவசமய வளர்ச்சிக்காகவும் சைவசமயிகளுடைய நலன்களைப் பாதுகாத்தற்காகவும் ஓர் ஸ்தாபனம் வேண்டுமெனப் பல அபிமானிகள் விரும்பியதால், திரு. ஆ. மு. கனகசபாபதி (இளைப்பாறியிருக்கும் பகுதி முதலியார்) அவர்கள் தலைமையில் முல்லைத்தீவுச் சைவமகாசபையின் முதற்கூட்டம் முல்லைத்தீவுச்சைவபாடசாலை மண்டபத்தில் 15-6-46 மாலை கூடியது. மகாசபையின் அமைப்பு விதிகள் அங்கீகரிக்கப்பட்டுப் பின்வரும் நிருவாக சபையினர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்; திரு. ஆ. மு. கனகசபாபதி முதலியார்; உபதலைவர்கள்: திரு. S. A. தர்மலிங்கம் D. M. O. திரு. S. சுப்பிரமணியம் D.R.O. காரியதரிகள்: திரு. K. சிவபாதம், திரு. K. கனகசபை, தனாதிகாரிகள்: திரு. K. அருளம்பலம், திரு. V. சுப்பிரமணியம்; நிருவாகசபையின் ஏனைய அங்கத்தினர் திரு. C. M. தர்மலிங்கம் Proctor, திரு. C. தம்பையா, Notary, திரு. சி. தம்பையா, திரு. செ. துரைசாமி, திரு. ம. கந்தையா, திரு. சி. துரைசாமி, திரு. பொ. வேலுப்பிள்ளை, திரு. சி. செல்லையா. பின் குறிக்கப்படும் இரு விஷயங்களும் மகாசபையாரால் ஆலோசிக்கப்பட்டு கடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

1. முல்லைத்தீவுச் சைவப் பாடசாலைக்கட்டிடத் திருத்தம்: இதற்காக நிதி திரட்டல்.

2. முல்லைத்தீவுப் பிள்ளையார் கோவில் நிர்வாகம்: இதைச் சீரிய முறையில் நடத்துவதற்கான முயற்சி.

## அப்பீல் தள்ளுபடி

யாழ்ப்பாண நகரில் பூந்தோட்டமொன்று அமைப்பதற்காகச் செலவிடும்படி டொக்டர் எஸ். சுப்பிரமணியம் கொடுத்த 1000 ரூபாவையும் நம்பிக்கைமோசடி செய்ததாகக் குற்றஞ் சாட்டி 500 ரூபாய் அபராதமும் கோடு கலையும்வரை சிறை விதிக்கப்பட்ட பட்டின சபைப் பழைய தலைவர், ஸ்ரீ கந்தவனம் ஐயாத்துரை அவர்கள் செய்துகொண்ட அப்பீல் பிரதம நீதிபதி, நீதிபதி கனகரத்ன ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்பட்டது. விசாரணை இறுதியில் பிரதம நீதிபதி அப்பீலைத் தள்ளுபடி செய்தார்.

## சுதந்திர சேவா சங்கம்

திருகோணமலை சுதந்திர சேவா சங்க ஆதரவில் 23-6-46 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு பெரிய முற்றவெளி மைதானத்தில் பொதுக்கூட்டமொன்று நிகழ்ந்தது. சங்கத் தலைவர் திரு. கோ. இராஜகோபால் தேசிய கீதம் பாடி கொடியேற்றி மூவர்ண கொடியின் கருத்தை விளக்கினார். உபதலைவர் ஐ. சரவணமுத்து தலைமை வகிக்க, கொழும்பு அன்பு மார்க்க சங்கத்தலைவர் ஆத்ம சுதந்திரத்தைப்பற்றிப் பேசினார். திருகுரானிலும், பகவத்கீதையிலும், பைபிளிலும், தாயுமானவரிலும் அவர் எடுத்துக்காட்டி புதுப்புதுக் கருத்துக்களை அறிவதற்குத் தூண்டு கோலென்று விளக்கினார்.

## காங்கேசன்துறையில்

திறமான இங்கிலீஸ் சீமெந்து, மலையாளம் கொழுக்கி ஓடுகள், செங்கல் மற்றும் பல சாய்ப்புச் சாமான்களும் விலை சகாயமாய்க் கிடைக்குமிடம்:—

**கார்க்கோ ட்ரான்ஸ்போட் கம்பெனி**
(CARGO TRANSPORT Co.)
**காங்கேசன்துறை**

தந்தி விலாசம்: "நியூகோ"; டெலிபோன் நம்பர் 5

[2784]

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம்–மயிலிட்டிதெற்கு 'திருமகள் நிலையம்' நா. பொன்னையா அவர்களால், சுன்னாகம், திருமகள் அழுத்தகத்தில் 1946 ஜூன் 30உ ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org